ஞானசம்பந்தம்

தருமை ஆதீனத் திங்கள் வெளியீடு

மலர் 48 | சுக்கில ஆண்டு ஆனித்திங்கள் 10—7—89 | இதழ் 8

தருமையாதீனக் குருமுதல்வர்

ஸ்ரீலஸ்ரீ குருஞானசம்பந்த சுவாமிகள்

உ

குருபாதம்

ஸ்ரீ குருஞானசம்பந்தர் அருள்வாக்கு

உள்ள மலநீங்கி
　யோங்கு சிவாநந்த
வெள்ளந் திளைத்தலுவாய்
　மேவுதலே — கள்ளவிழ்பூங்
கொத்தார் விரிசடையார்
　கூறு சிவாகமத்திற்
சித்தாந்த முத்தியெனத் தேறு.

— முத்திநிச்சயம் 22

ஆசிரியர் :-
வித்துவான்
இராமலிங்கத் தம்பிரான்
சுவாமிகள்

துணையாசிரியர் :-
மகாவித்துவான்
சி. அருணைவடிவேல்

உ

குருபாதம்

ஞானசம்பந்தம்

தருமையாதீனத் திங்கள் இதழ்

மலர் 48 | 10-7-89 | இதழ் 8

உட்பொருள்

எண்		பக்கம்
1	ஏழை என்பார் யார்?	393
2	தருமை ஸ்ரீலஸ்ரீ குருமகா சந்நிதானம் அவர்கள் வழங்கிய ஆசியுரை ...	399
3	போதமும் சித்தியும் ...	406
4	குமரகுருபரரும் வேமனரும் ...	409
5	வீட்டிலிருக்கும் பெண்கள் ...	415
6	வானங்காள் பெய்க மழை ...	419
7	மேலை நாட்டுத் தத்துவ மேதைகள் ...	422
8	மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள் ...	426
9	கடிதம் ...	429
10	புகழ்ச்சோழர், நரசிங்கமுனையரையர்	430
11	ஸ்ரீ கல்யாணசுந்தர மூர்த்தி ...	434
12	செய்திகள் ...	435
13	எதிர்காலம் ...	437
14	இதழ்வழிச் சைவசமயக் கல்வி V பாடம்-6, ...	441

உ
குருபாதம்

ஞானசம்பந்தம்

மலர் 48 ★ இதழ் 8

தருமை ஆதீனத் திங்கள் இதழ்

சுக்கில – ஆனி 10—7—1989

பொன்தயங் கிலங்கொளிந் நலங்குளிர்ந்த புன்சடை
பின்தயங்க ஆடுவாய்! பிஞ்ஞகா! பிறப்பிலீ!
கொன்றையம் முடியினாய்! கூடல் ஆல வாயிலாய்!
நின்தயங்கி யாடலே நினைப்பதே நியமமே.

— திருஞானசம்பந்தர்.

ஏழை என்பார் யார்?

குறிப்பும் வெளிப்படையும் :

'எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே' என்பார் தொல்காப்பியர். எழுத்துக்கள் தனித்தோ, தொடர்ந்தோ பொருள் தரும்போது மட்டுமே சொல் என்ற நிலையை அடைகிறது. சொற்கள் பொருள் தரும் நிலையை இரண்டாகக் குறிப்பர். அவை வெளிப்படையாகப் பொருள் தரும் நிலை, குறிப்பாகப் பொருள் தரும் நிலை என்பன. நிலம், நீர், தீ என்பன வெளிப்படையாகப் பொருள் தருவன உணவுண்டான் கல்லைக் கடித்த நேரத்தில், சமையல் செய்தானை நோக்கி 'நன்றாகச் சமைத்துள்ளாய்' என்றால், சமைத்தது நன்றாயில்லை என்ற பொருளைத்தரும். இது குறிப்பாகப் பொருள் தரும் நிலை. சொல் பொருள் தரும் நிலை குறித்து இலக்கண நூலார் விரிவான வரையறைகளை எடுத்துரைத்துள்ளனர். மொழி வளமும், உலகியல் அறிவும் உடையார்க்குச் சொல் தரும் நுட்பமான பொருள் வேறுபாடுகள் நன்கு

புலனாகும். பொருட் செறிவுடைய அத்தகைய உலகியல் வழக்காற்றுச் சொல் ஒன்றை அறநூல்களும், சமய நூல்களும் நுண்மையான பொருள்களில் கையாண்டுள்ள திறம் சிந்தித்து மகிழத்தக்கது.

ஏழை – சொற்பொருள் :

'ஏழை' என்ற சொல் அனைவருக்கும் அறிமுகமான ஒன்று. உலகியல் நோக்கில் அச்சொல் செல்வ வளமில்லாத வறிஞனைக் குறித்து வழங்கப்பட்டு வருகிறது. திருவள்ளுவர் 'இல்லான்' என்ற சொல்லால் செல்வவளம் பெறாதவனைக் குறிப்பார். சங்க இலக்கியங்கள் தொடங்கி இன்றுவரை உலகியல் வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் ஏழை என்ற சொல் பெரும் பான்மையும் 'வறிஞன்' என்ற பொருளிலேயே வழங்கப்பெற்றுள்ளது.

" தோழனே டாயினும் ஏழைமை பேசேல் "

என்றும்,

" ஏழை என்றும் அடிமை என்றும்
எவனும் இல்லை ஜாதியில் "

என்றும் வரும் இலக்கியத் தொடர்களில் ஏழை என்ற சொல், 'இல்லான்' 'செல்வ வளமற்றவன்' என்ற பொருள்களிலேயே வழங்கப் பெற்றிருத்தலைக் காணலாம். ஆனால், ஆழ்ந்துநோக்கினால் ஏழை என்ற சொல் துறைதோறும் ஒருவன் பெற்றுள்ள குறை பாடுகளை எல்லாம் குறித்து வருதல் புலனாகிறது.

அகராதி – இலக்கண விளக்கங்கள் :

அகராதிகள் 'ஏழை' என்ற சொல்லுக்கு, 'அறிவிலான்', 'தரித்திரன்', 'பேதை', 'அறிவிலாள்', 'அறியாமை', 'வறிஞன்', 'வறியன்' என ஒரேநோக்கில் பலவாறாகப் பொருள்விரிக்கின்றன. செல்வக் குறைபாடுடையவனை மட்டுமின்றி, அறிவுக் குறைபாடு உடையவனையும் ஏழை என்ற சொல் குறித்தலை அகராதிப் பொருளால் மட்டுமல்லாது, இலக்கண நூற்பாக்களாலும் அறிய இயல்கின்றது. நன்னூலில், மாணக்கர் ஆகாதார் எவரெவர் என்பதைக் கூறவரும் நூற்பா ஒன்று,

" களிமடி மானி காமி கள்வன்
பிணியன் ஏழை பிணக்கன் சினத்தன்
துயில்வோன் மந்தன் தொன்னூற் கஞ்சித்
தடுமா றுளத்தன் தறுகணன் பாவி
படிறனின் னோர்க்குப் பகரார் நூலே "

என அமைந்துள்ளது. இந்நூற்பாவில் 'ஏழை' என்ற சொல் பொருட்குறைபாடுடையவனை மட்டுமின்றி அறிவுக்குறைபாடுடையவனையும் குறித்து நிற்பதை உரைகாரர்கள் எடுத்துக்காட்டுகின்றனர். எனவே, ஏழை என்பதுபொருட் குறைபாடு உடையவனையும், அறிவுக் குறைபாடு உடையவனையும் குறித்தலை அறிகிறோம். நன்கு சிந்தித்தால் எவ்வெத்துறையில் ஒருவன் குறைபாடுடையவனோ அவ்வத்துறையில் அவன் ஏழையாகவே கருதப்படுவான் என்பது நன்கு புலனாகும். நன்கு உண்ணமாட்டாதவனை 'POOR EATER' என்று குறித்தல் ஆங்கிலத்திலும் உண்டு. இவ்வகையில் உடல் வலிமை, அறிவுத்திறம் முதலியவற்றில் ஆடவனினும் குறைந்தவர் என்றநோக்கில் பெண்ணை 'ஏழை' என்ற சொல்லால் முன்னோர் குறித்தனர்.

பெண்மையைக் குறித்தல் :

மானிடப்பெண்களைமட்டுமின்றிச் சிவசக்தியாகிய உமையம்மையைக் குறிக்கும் இடங்களிலும் சைவ சமய அருளாளர்கள் 'ஏழை' என்ற சொல்லைக் கையாண்டுள்ளனர் திருஞானசம்பந்தர் தாம் அருளிய கோளறு திருப்பதிகத்தில்,

" என்பொடு கொம்பொ டாமை இவைமார் பிலங்க
எருதேறி ஏழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடிவந்தென்
உளமே புகுந்தஅத னால் "

என்று குறிக்குமிடத்திலும், மாணிக்கவாசகர் திருவெம்பாவையில்,

" ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய் "

என்று குறிக்குமிடத்திலும், ஏழை என்ற சொல் உமையம்மையைக் குறித்துநிற்றலைக் காணலாம் 'ஏழைபங்காளன்' என்பதற்கு மேல்நோக்காகப் பார்ப்போர்க்கு உமையை ஒரு பாதியாகக் கொண்டவன் என்று பொருள்தோன்றினும் உண்மையில் ஏழை பங்கை ஆள்பவன் என்பதே பொருளாக அமைகிறது.

வினாவும் பயனும் :

துறைதோறும் மக்களிடையே காணப்படும் தகுதிக்குறைபாடுகளுக்கு, - வறுமைக்கு - ஏழ்மைக்கு எது காரணம் என்பது சிந்திக்க வேண்டுவது. சிலர் ஏழையாகச் சிலர் செல்வராகத் திகழ யாது காரணம்? தத்துவ ஞானியர் பழவினை காரணம் என்பர்.

உண்மைதான். தருமை ஆதினக் குருமுதல்வர் ஸ்ரீ குருஞான சம்பந்தரும்,

" அவரவர் வினைவழி அவரவர் வந்தனர்
அவரவர் வினைவழி அவரவர் அனுபவம் "

எனப் பிறப்பும், பிறப்பில் பெறும் உயர்வு தாழ்வான வாழ்வும் வினைவழிவருவன என்பதை அருளிச்செய்துள்ளார்கள். இறைவன் உயிர்களின் வினைக்கு ஈடாகவே பயன்களைத் துய்ப்பிப்பான் என்பதனையும் அவர்களே,

" அவரவருக் குள்ளபடி ஈசனரு ளாலே
அவரவரைக் கொண்டியற்றும்... "

எனக் குறித்தருளுகின்றார்கள். எனவே, செல்வ - வறுமைகளும், இன்பத் துன்பங்களும் வினைவழி வருவன என்பது தெளிவாகிறது. அங்ஙனமாயின் 'வினை' என்பது யாது என்ற வினா எழுகிறது.

வினை - செயல் - கருமம் :

வினை என்ற சொல்லுக்குப் பழவினை என்றே பலரும் பொருள் கொள்கின்றனர். வினை என்ற சொல்லுக்கு நேரடிப் பொருள் 'செயல்' என்பதே. வினை என்பது அவரவர் மேற்கொள்ளும் முயற்சியோடு கூடிய செயல், தொழில், பணி, வேலை, உழைப்பு இவற்றையே குறித்து வருகிறது. இதனைக் கருமம் என்றும் கூறுவர். 'பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம் கருமமே கட்டளைக்கல்' என்றும், 'கருமம் செய ஒருவன்' என்றும் வரும் குறள்தொடர்கள் வினை என்ற பொருள்தருவதாகக் கருமம் என்ற சொல் ஆளப்படுதலை உறுதி செய்கின்றன. 'வினைமுற்றிய தலைவன் பாகற்கு உரைத்தது' எனவரும் அகப்பொருள் இலக்கியத் துறைக் குறிப்பில் வினை என்பது கடமை, பணி செயல் என்ற பொருளில் வருதலைக் காணலாம். எனவே வினை என்பது செயல் என்றே பொருள் கொள்ளத் தக்கது என்பதை நன்கு உணர முடிகிறது.

உலகியலும் உழைப்பும் :

வசதி இல்லாதவர் பலராக உள்ளனர். வசதி உள்ளோர் சிலராக உள்ளனர். இதற்குக் காரணம் சோம்பலின்றிச் செயற்படுவோர் அதாவது உழைப்போர் சிலர் தான் உள்ளனர். அச்சிலர்தான் வளமாக வாழ்கின்றனர். சோம்பலால் உழைப்பின்றிச் செயல்படாமல் உள்ளோர் அதிகமாக உள்ளனர். அப்பலர்தான் வளமின்றி வறுமையில் உழல்கின்றனர். இது

கண்முன் காணும் காட்சி. இது நிற்க. சிலர் உழைக்காமலே உயர்வாக வாழ்கின்றனரே என்றால் அதற்குக் காரணம் முற்பிறப்பில் செய்த செயலின்பயனே. இப்பிறப்பில் அனுபவிக்கிறார் என்பதே கருத்தாகும். அதைத்தான் முன்வினை பழவினை என்கிறோம். இக்கருத்துக்களையே திருவள்ளுவர்,

> "இலர் பலராகிய காரணம் நோற்பார்
> சிலர், பலர் நோலாதவர்"

என்ற குறளால் குறிப்பிடுகின்றார்.

அப்படியானால் இல்லாதவர் இல்லாதவராகவே இருக்க வேண்டியதுதானா? என்ற கேள்வி எழுகின்றது. வசதியுள்ள குடும்பத்தார் வழிவழியாக வசதியாகவே தொடர்ந்து இருக்கின்றனர் என்றும் சொல்லமுடியாது. இல்லாதவர்கள் வழிவழியாகத் தொடர்ந்து வசதியின்றி இருக்கின்றனர் என்றும் சொல்ல முடியாது. இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு வறுமையில் வாடிய குடும்பத்தினர் உழைப்பின் பயனால் இப்போது வளமாக வாழ்வதையும், அதே இருபத்தைந்து ஆண்டுகட்கு முன்பு வளமான குடும்பமாக வாழ்ந்தோர் உழைப்பின்மையால் வறுமையில் வாடுவதையும் காண்கின்றோம்.

ஏழைகள் உயர ஒரே வழி :

பலராக உள்ள ஏழைகளை உயர்த்த வேண்டுமானால் பணம், காசு, பொருள் கொடுத்து அவர்களை உயர்த்தமுடியாது. சலுகைகளாலும் உயர்த்தமுடியாது. அரசு அவர்களை உழைக்கச்செய்வதன் வாயிலாகத்தான் அவ்வேழைகளை உயர்த்தமுடியும், ஆகவே அவர்களை உழைக்கச்செய்யவேண்டும். அப்படி உழைத்துச் சம்பாதித்த பொருளை உணவு, உடை, இருக்க இடம் முதலிய வளர்ச்சிக்குரியவகையில் செலவு செய்யப் பழக வேண்டும். குடிப்பழக்கம், சிலநாள் வேலை செய்தால் பலநாள் வேலை செய்யாமல் வீண்விவகாரங்கள் செய்தல், சீட்டாடிப் பொருளிழத்தல், இவை போன்ற தீயசெயல்களைத் தவிர்த்தல் வேண்டும். இவற்றை அரசுதான் அவர்கட்கு அன்பினாலும் அச்சத்தினாலும் உண்டுபண்ண வேண்டும். அன்பைவிட அச்சத்தினால்தான் அவர்கள் திருந்துவர் என்பதைத் திருவள்ளுவரும் "அச்சமே கீழ்களது ஆசாரம்" என்ற குறளால் விளக்கியுள்ளார். இனிக் கப்பேசி ஏழைகளைக் கெடுப்பதைவிட அச்சுறுத்தி வாழவைப்பதேமேல். அரசின் தலையாய கடமையும் அதுவே. "நன்னடை நல்கல் வேந்தற்குக் கடனே" என்பது புறநானூற்றுப் புலவரின் பொன்மொழி

உழைப்போம் உயர்வோம் :

இறைவன் படைப்பில் இலவசமாக எதனையும் பெற இடம் வைக்கவில்லை. ஒரு வயது குழந்தை இருக்கிறது என்றால் அது இலவசமாகத் தாயிடம் பால் குடிக்கவில்லை! இட்டும் தொட்டும், கவ்வியும் பொக்கை வாயால் சிரித்தும் பெற்றோரை மகிழ்வித்தே பால் குடிக்கிறது. அதுசெய்யும் மகிழ்ச்சிக்கு விலை ஏது? வயது முதிர முதிர அவ்வவ்வயதிற்கேற்பப் பெற்றோர்க்கு (Call-boy) கால்பாய் போன்ற சிறுசிறு பணிகளைச் செய்தே தன்னைவளர்த்துக் கொள்கிறது. இதேபோல் முதியவர்களும் உடல் பணி செய்ய இயலாவிட்டாலும் குடும்பத்திற்கு உறுதுணையான ஆலோசனைகளைச் சொல்லி நெறிப்படுத்தி, காப்பாளராகயிருந்தே தங்கள் தேவைகளை அக்குடும்பத்தில் பெறுகின்றனர். இங்கும் இலவசம் இல்லை. ஜப்பானில் இலவசத்திற்கே இடமில்லை. அதனால்தான் வளமாக வாழ்கின்றனர். நம்மவர்களும் அவ்வழிநடைபயிடுவோமாக.

உழைக்காமல் வாழலாம் என்ற எண்ணம் மக்கள் நெஞ்சிலிருந்து தகர்த்து எறியப்படவேண்டும். எந்த ஒரு துறையில் ஒருவன் பின் தங்கியிருந்தாலும் அந்தத் துறையில் அவன் போதுமான முயற்சியை - உழைப்பை மேற்கொள்ளவில்லை என்பதே அடிப்படைக் காரணமாக இருக்கும் என்பது உணர்த்தப்படவேண்டும். உழைக்காது வாழநினைப்போர்க்கு அரசோ, சமூகமோ, தனிமனிதர்களோ எவ்வித உதவிகளையும் செய்தல்கூடாது. இயற்கையும், இயற்கையே வடிவாய இறைவனும் ஒரு நொடிப்பொழுதும் கடமை மறந்து சோர்வதே இல்லை சூரிய சந்திரர்கள் காலம் தவறாது உதித்து அவரவர் பணிகளைச் செய்து மறைகின்றனர். எனவே, ஏழ்மை எங்கிருந்தோ வருவதன்று. உன் சோம்பலில் தான் அது உருவாகிறது. செல்வம் உன் உழைப்பிலிருந்தே உருவாகிறது.

> " ஆக்கம் அதர்வினாய்ச் செல்லும் அசைவிலா
> ஊக்கம் உடையான் உழை "

என்பார் திருவள்ளுவர். எனவே மக்கள் சோம்பிக்கிடக்காது உழைத்துச் செல்வம் பெற்று வறுமை நீங்கி வளமுடன் வாழமுயலவேண்டும். அரசு மக்கட்குத் தக்க பயிற்சியளிக்க வேண்டும்.

> " பெருமைக்கும் ஏனைச் சிறுமைக்கும் தத்தம்
> கருமமே கட்டளைக் கல்."
>
> — திருவள்ளுவர்.

> " சலுகை தாழ்த்திவிடும்
> உழைப்பு உயர்த்திவிடும் "

குருபாதம்

திருக்கயிலாயப் பரம்பரைத் தருமை ஆதீனம்

26 ஆவது குருமகாசந்நிதானம்

ஸ்ரீலஸ்ரீ சண்முக தேசிக ஞானசம்பந்த
பரமாசாரிய சுவாமிகள்

காஞ்சிபுரத்தில் நடைபெற்ற

ஸ்ரீ குமரகுருபரரின் 300 ஆவது ஆண்டு நினைவு விழாவில்

வழங்கியருளிய

ஆசியுரை

1—5—89

" சித்திதரும் நாதன் தென்கமலை வாழ்நாதன்
பத்திதரும் நாதன் பரநாதன் — முத்திப்
பெருநாதன் ஞானப்ரகாசன் உண்மை
தரும்நாதன் நம் குருநாதன் "

— குருஞானசம்பந்தர்.

கந்தர் கலிவெண்பா – ஒரு காவியம் :

செந்தமிழ் நாட்டினிலே தாமிரபரணி நதிக்கரையினிலே விளங்குவது ஸ்ரீவைகுண்டம் என்னும் தலம். அத்திருத்தலத்தின் ஒருபகுதியில் விளங்குகிற கைலாசபுரம் என்னும் ஊர், தமிழிற்கும் சைவத்திற்கும் வழங்கிய அருட்கொடையே குமரகுருபரர் ஆவார். அவர் செந்தமிழ்க் கவிஞராய், சித்தாந்த போதகராய், சிவநெறிச் செல்வராய், தருமை ஆதீனத்தின் தவப்புதல்வராய் அறிவு ஒளி வீசிய துறவரசர். அவர் இன்றைக்கு 350 ஆண்டுகளுக்கு முன்னர்த்தோன்றி, 5-வயது வரையில் வாய்பேசாத மௌனியாய் இருந்து, செந்திலாண்டவன் திருவருளால் பேசும் ஆற்றல் வாய்க்கப் பெற்றார். வாய் இதழ் திறக்கும் பொழுதே சித்தாந்தத் தேன் பிலிற்றும் செந்தமிழ்க் காவியம் உருவானது. அரும்பாய்க் குவிந்திருந்த திருவாய் மலரும்போதே 'பூ' வாய் மலர்ந்தது. அது தான், "பூமேவு செங்மலப் புத்தேளும் தேறரிய" என்று தொடங்கும் கந்தர் கலிவெண்பா என்னும் காவிய நூலாம். இந்நூல் காவியமா? ஆம்! காவியம்தான். கந்தபுராணக்காவியத்தில் 10346 திருப்பாடல்கள் கூறிய கருத்துக்களை, 122 கண்ணிகளில் அடக்கிக்

கூறிய வகையில் இது காப்பியம்தானே? ஒரு காப்பியத்திற்குரிய இலக்கணங்களை இது முழுமையும் கொண்டுள்ளது. கச்சியப்பரால் செய்யப்பெற்ற கந்தபுராணக் கருத்தினைச் செய்திகள் விடாத வண்ணம் சுருக்கமாக இந்நூல் விளம்புதலின், 'குட்டிக்கந்தபுராணம்' என்னும் பெயரையும் இது பெற்று விளங்குகிறது. குமரகுருபரருக்குப் பின்னே வாழ்ந்த ஆதீன அடியவர் சம்பந்தசரணாலயர் கந்தபுராணக் கருத்துக்களை ஆயிரம் பாடல்களில் 'கந்தபுராணச் சுருக்கம்' என்னும் பெயரில் பாடியுள்ளார். எனவே கந்தபுராணமும், கந்தர்கலி வெண்பாவாகிய குட்டிக் கந்தபுராணமும், கந்தபுராணச் சுருக்கம் என்னும் நூலும் காப்பியங்களாகவே மிளிர்கின்றன.

கண்ணிகளின் பகுப்பு :

குமரகுருபரர் அருளிய கந்தர் கலிவெண்பா குறித்துச் சிறிது சிந்திப்போம். இதில் அமைந்துள்ள 122 கண்ணிகளில் 1 முதல் 36 வரை சிவபரத்துவம் கூறுகிறார்; 37 - 57 வரை முருகனின் திருவுருவ வர்ணனை கூறுகிறார்; 58 - 65 வரை முருகன் பற்பல வடிவாய் விளங்கும் நிலை கூறுகிறார்; 65 - 74 வரை தசாங்கம் கூறுகிறார்; 75 - 86 திரு அவதாரம் கூறுகிறார்; 87 – 104 திருவிளையாடல்களையும் போர் நிகழ்ச்சியையும் கூறுகிறார்; 105 - 110 வரை தெய்வயானை வள்ளித் திருமணம் கூறுகிறார்; 111 – 122 முடிய வேண்டுகோளாகப் படிப்போர் பயன் கூறுகிறார். இனி ஓராற்றான் கருத்துத் தொடர்ச்சியை நோக்குவோம்.

சிவபரத்துவம், கடந்தநிலை :

செந்தாமரையில் வீற்றிருக்கின்ற பிரமனும், அவனால் ஓதப்படும் வேதமும், வேதத்தின் முதலாகிய நாதமும், நாதமுடிபும், ஆன்ம போதமும் காணாத அறிவுப் பொருளாய் இருப்பவன் இறைவன் என்று எடுத்த எடுப்பிலேயே கந்தர்கலிவெண்பா பரம்பொருளின் பரத்துவம் பேசுகிறது. இக்கருத்து, இறைவனின் உண்மைநிலை; அதாவது சொரூபநிலை ஆகும். இதனைக் கடந்தநிலை என்று கூறுவர். அவ்விறைவன் முதல், நடு, முடிவு இல்லாத, உண்மை, அறிவு, இன்பப் பொருளாய் - சச்சிதானந்த ரூபியாய் இருக்கிறான் என்று அடுத்துக் கூறுகிறது. அவன், இயல்பாகவே பாசபந்தங்களிலிருந்து நீங்கிய தனிப் பொருளாக இருக்கிறான் என்றும் கூறுகிறது.

கலந்தநிலை ;

இத்தகைய கடந்த நிலையில் விளங்கும் கடவுள், ஆன்மாக்களை ஈடேற்றுதற்பொருட்டு இறங்கிவருகிறான் என்று சைவசித்தாந்தம்

கூறும் கருத்தினை உளங்கொண்டு, குருபரர் எங்கும் வியாபித்திருக்கும் பரமசிவமாய் விளங்கி, உயிர்களின் பற்றுக்கோடாக நிற்கின்ற பரம்பொருளாய் விளங்குகின்றான் என்கிறார். இது உயிர்களோடு கலந்த நிலை ஆகும். கடந்த நிலையில் இருந்த கடவுள், கலந்த நிலையில் இறங்கிவருகிறான் என்று கூறுகிறார். அனைத்திலும் வேறாகி நின்றவன் அனைத்திலும் கலந்து ஒன்றாகிவருகிறான் என்றும் கூறுகிறார். பெருமானை, கடந்த நிலையில் கடவுள் என்றும் கலந்த நிலையில் இறைவன் என்றும் குறிக்கின்றோம். கடவுள் கடந்திருப்பது. இறை எல்லாவற்றிலும் செறிந்திருப்பது.

மூன்று நிலையில் அருள் வழங்கல் :

இங்ஙனம், அப்பெருமான் இறங்கிவரும்பொழுது உயிர்களின் தகுதிப்பாட்டிற்கு ஏற்ப வெவ்வேறு உருவில் நின்று மூவேறுவகைப் பட்ட உயிர்கட்கு அருளுகின்றான் என்கிறார். ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் உடைய சகலருக்குக் கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக் குருபரன் என்றதிருப்பெயர் கொண்டு, துன்பத்தைநீக்கி நீங்காப்பேரின்ப நிலையை அருளுகிறான் என்றும் ஆணவம், கன்மம் என்னும் இரண்டு மலங்களும் உடைய பிரளயா கலருக்கு மலர்க்கண் மூன்றும்தாழ்சடையும் வன்மழுவும் மானும் கொண்டு இடபாகத்தில் உமையம்மையுடன் வெள்ளை விடைமேல் பவளவெற்பு எனத்தோன்றிக் கருமமலக் கட்டறுத்து அருள் செய்து ஈடேற்றுகிறான். ஆணவம் ஒன்றுமே உடைய விஞ்ஞான கலருக்கு உள்நின்று இன்பம் உதவுகின்றான் என்று கூறுகிறார்.

சிவனே முருகன் :

இத்தகைய இறைவனின் திருவுருவத்தை அடிகளார் அடுத்து நுட்பமாக விளக்குகிறார். யான், எனது என்று அற்ற இடமே அவரின் திருவடியாக, மோன பரமானந்தமே அவரின் திருமுடியாக, ஞானமே அவரின் திருவுருவாக, அறிவு, இச்சை, செயல் எனும் மூன்றும் அவரின் முக்கண்களாக, அருளே அவரின் திருக்கரமாக, இந்த நிலவுலகமே அவரின் திருச்சந்நிதியாக இருக்கத் தனிச் சுடராய் நின்றருளுகிறான் என்கிறார். இங்ஙனம் தனிச் சுடராகவும், எவ்வுயிர்க்கும் பின்னமறநின்ற பெருமானாகவும் விளங்கும் சிவபரம்பொருளே பன்னிரண்டு திருக்கண்ணும் ஆறு திருமுகங்களும் பன்னிரண்டு திருக்கரங்களும் கொண்டு முருகனாக அன்பர் அகத்தாமரையில் வீற்றிருந்து அருள்பாலிக்கிறான்

என்கிறார். இறைவன் வேறு முருகன் வேறு அல்லர் என்பதை சண்டு அழுத்தமாக அடிகள் விளக்குகிறார். அந்தப் பரம்பொருள் முருகனாக ஏன் அவதாரமாயிற்று ? என்ற அருள் வரலாற்றை அடுத்துக் கூறுகிறார்,

அறுமுகன் அருள் வரலாறு :

பூங்கயிலைவெற்பில்உமையம்மை இடப்பாகத்தில் இருந்தருள, இறைவன் வீற்றிருந்தகாலை, அசுரர்களின் செயலுக்கு ஆற்றாத வானவர்கள் வேண்டிக்கொண்டதற்கேற்ப, ஐந்து முகத்தோடு அதோமுகமும்தந்து திருமுகங்கள் ஆறின்வழித் தீப்பொறி ஆறு உய்ப்ப, அவை சரவணப்பொய்கையில் கார்த்திகைப்பெண்களால் வளர்க்கப்பெற்று உமாதேவி தன்கையால்எடுத்தணைத்துக் கந்தன் என்று பெயர் சூட்டினர். பின் அம்மையிடம் வேல்கொண்டு, விடைகொண்டு, தாரகன், பானுகோபன், சிங்கமுகன், சூரபதுமன் ஆகியோரைஒடுக்கித் தேவர்களின் துன்பத்தை நீக்கியருள, தேவர்களின் வேண்டுகோளுக்கிணங்க, கற்புவழியே தெய்வயானையை மணந்து, பின் களவுவழியே வள்ளியையும் மணந்து, அன்பர் அகத்திலும் செந்திற் பதியிலும் வீற்றிருந்தருளுகிறான் வேலவன் என்கிறார் அடிகள்.

துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் :

இத்தகைய இறையருளை விளக்கும் அரிய நூலினை அனுதினமும் நியதியாக, ஆசாரத்துடன் ஓதி வருபவர்களுக்குப் பல்பிணி நீங்கி நற்பலன் கிட்டும் என்பது உறுதி. இந்நூலின் நிறைவில் துன்பநீக்கம் குறித்தும் இன்ப ஆக்கம் குறித்தும் தொகுத்துக் கூறுகின்றார் முனிவர். பகை, காலபயம், பிணி, பாதகம், மற்றும் பாம்பு முதலிய நச்சுயிர்களால்வரும் இடையூறு, தீ, நீர் முதலான வற்றால் வரும் துன்பம், துட்ட மிருகங்களால் வரும் துயரம் ஆகிய அனைத்தையும் நீக்கி, வேண்டிய வேண்டியாங்கு வரமும் அருளி, நமது உள்ளத்திற்குள் முருகன் உல்லாசமாக வீற்றிருந்தருளுவான் என்கிறார். இத்துடன் இம்மைப் பயனாகப் பழுத்த தமிழ்ப் புலமையும் அருளி ஒழுக்கமுடன் வாழுங்காலத்து இருவினைகளின் வழிவரும் துன்பங்களை நீக்கி, ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களையும் ஒடுக்கி, சிவபோதம் அற்றுவிட அடியார் களின் திருக்கூட்டத்தில் சேர்த்து நிறைவாக எல்லாப் பயன்களின் முடிந்த பயனாக உள்ள இறைவனின் திருவடிப்பேற்றையும் தந்து ஆட்கொள்ளவேண்டுகிறார் குருபரர். இவ்வருள் நூலைச் சிறுபிராயத் திலிருந்தே ஓதியதன் பயன் எதிர்பாராமலே நமக்கும் கிடைத்

துள்ளது. பேசும்இயல்பு, தமிழ்ப்புலமை, துறவொழுக்கம், தம்மை விடுத்து ஆயும் பழைய அடியார் கூட்டம் முதலியன நாம்பெற்ற பேறு.

முந்நூறுவது ஆண்டு விழா

இத்தகைய குருபரர் இற்றைக்கு 300 ஆண்டுகளுக்கு முன்பு இறையடிநீழல் அடைந்தார். அவரின் 300-ஆவது ஆண்டு நினைவு நிறைவு விழாவினைக் கடந்த ஓராண்டுக் காலமாகத் தமிழ் கூறும் நல்லுலகம் எங்கணும் கொண்டாடிவருகிறார்கள். அவர் திருமடம் அமைத்துத் தொண்டுசெய்த காசியம்பதியில் இவ்விழா கடந்த டிசம்பரில் தருமை ஆதீனம் அனைத்துலக சைவ சித்தாந்த ஆராய்ச்சி நிறுவனத்தின்சார்பில் கயிலைமாமுனிவரின் ஆதரவிலும் முன்னிலையிலும் கொண்டாடப்பெற்றது. குருபர முனிவரின் முந்நூறுவது ஆண்டு நிறைவுவிழா, ஆராய்ச்சி நிறுவனத்தின் மூன்றுவது கருத்தரங்கு, மூன்று பல்கலைக் கழகங்களுடன் இனிது கொண்டாடப்பெற்றது குறிப்பிடத்தக்கது. காசிக் கருத்தரங்கிற்குச் செல்ல முடியாதிருந்தநிலையில், இங்கு, இன்று காசிக்கு ஒரு இஞ்ச் அதிகமான காஞ்சிபுரத்திற்கு வருவதற்குத் திருவருள் கூட்டுவித்தமையை எண்ணி மகிழ்கின்றோம். ஒரு இஞ்ச் அதிகம் என்பது, காசி – காஞ்சி எனும் சொற்களிலுள்ள 'ஞ்' என்னும் எழுத்தைக் குறிக்கிறது.

நூற்பணியும் சமூகப்பணியும் :

இம்முனிவர் 16 நூல்களை இயற்றியுள்ளார். ஒவ்வொன்றும் ஒவ்வொருவகையில் சிறந்து திகழ்கிறது. கந்தர் கலிவெண்பா, இறைவனும் முருகனும் ஒருவரே என்று இயம்புகிறது. மீனாட்சியம்மைப் பிள்ளைத்தமிழ், இறைவனும இறைவியும் வேறு வேறு அல்லர் என விளம்புகிறது. நீதிநெறி விளக்கம் அறத்தையும் நீதிகளையும் பல பழமொழிகளின் வாயிலாக விளக்குகின்றது. பண்டாரமும்மணிக்கோவை ஆசாரியனும் ஆண்டவனும் வேறல்லர் என அறிவிக்கிறது. சிதம்பரச் செய்யுட்கோவை இலக்கியத்தில் இலக்கணத்தை இனிது எடுத்து இயம்புகிறது. இங்ஙனம் நூற்பணி செய்தவர், தமது யாத்திரையினால் வடநாட்டையும் தென்னாட்டையும் சமய ஒருமைப்பாட்டு நோக்கில் இணைத்து, அவ்வகையில் சமூகப்பணியும் புரிந்துள்ளார்.

அம்மையை அழைக்கும் அழகு :

இங்குக் காஞ்சிபுரத்தில் காமாட்சியம்மையின் அருள் பொழிகிறது. காமாட்சியும் மீனாட்சியும் வேறல்லர் ஆதலின், குருபரர்

மீனாட்சியம்மையின்மீது பாடிய ஒரு பாடலைச் சிந்திப்பது பொருந்தும்.

'தொடுக்கும் கடவுள் பழம்பாடல்' என்று தொடங்கும் பாடலில் அம்மையை ஏழு வகைகளில் அழகுஒழுக அழைக்கின்றார்.

முதலாவதாகத் "தொடுக்கும் கடவுள் பழம்பாடல் தொடையின் பயனே" என்கிறார். இங்குப் பழம் பாடல் என்பது வேதத்தைக் குறிக்கும். வேதத்தின் பயன் அம்மை என்கிறார். சேக்கிழார் சண்டேசர் புராணத்தில், "வேதத்தின் பயன் சைவம்" என்று கூறுவர். இரண்டிற்கும் வேறுபாடு இல்லை. வேதத்தின் பயன் அம்மையும்; அப்பனும் தான். ஆதலின் இரு அருளாளர்களும் இங்ஙனம் வேறுபாடின்றிக் குறித்தனர்.

அடுத்துத் 'தீந்தமிழின் ஒழுகும் நறுஞ் சுவையே' என்கிறார். தமிழின் சுவையாக அம்மை விளங்குகிறாள் என்பது இதன்கருத்து இதனால் வேதமும் தமிழும் இடத்தாலும் மொழியாலும் வேறுபட்டிருப்பினும் பொருளால் ஒன்றையே குறிக்கிறது. என்ற பெருமையை உணர்தல் இன்றியமையாதது.

அகந்தைக் கிழங்கை அகழ்ந்து எடுக்கும் அடியார் உள்ளக் கோயிலில் ஏற்றும் விளக்காக அம்மை இருக்கிறாள் என்கிறார். குமார தேவரும் இதே கருத்தில், "ஒப்பில் தவத்தர் உளக் கோயிற்கு ஏற்றும் ஞான மணி விளக்கே" என்று கூறுகிறார்.

அடுத்து இமயப் பொருப்பில் விளையாடும் 'இளமை ததும்பும் பெண்யானையே' என்கிறார்.

இதுவரை அம்மையைத் தனித்துப் போற்றி வந்த முனிவர், இவள் இறைவனுடன் என்றும் பிரியாது இணைந்திருப்பவள் என்பதை இலக்கியச் சுவைபடக் கூறுகிறார். இவ்வுலகத்தைக் கடந்து நிற்கும் ஒப்பற்ற இறைவன் திருவுள்ளத்தில் அழகு ஒழுக எழுதிப்பார்த்திருக்கும் உயிர் ஓவியமே! என்கிறார். இறைவனுடன் என்றும் பிரியாதிருப்பவள் என்னும் கருத்தை இலக்கியச் சுவை படக் கூறிய நயம் அறிந்து மகிழ்தற்குரியது.

> "உடையாள் உன்றன் நடுவிருக்கும் உடையாள்
> நடுவிுள் நீயிருத்தி"

என்னும் திருவாசகப் பாடல் பகுதியையும் ஈண்டு நினைக்கத்தகும்.

அடுத்துக் குழலாகிய காட்டினை ஏந்தும் இளவஞ்சிக்கொடியே என்கிருர். ஈண்டு வஞ்சி என்பது வஞ்சிக் கொடி எனும் பொருளில் வருகிறது. சுந்தரர் இவ்வூர்த் தேவாரத்தில் அம்மையைக் குறிக்கும் இடத்தில் இவ்வஞ்சி எனும் சொல்லைப் பெய்து போற்றியுள்ளமையைப் பொருத்திப் பார்க்கலாம்.

"வெள்ளங் காட்டி வெருட்டிட வஞ்சி
வெருவி ஓடித்தழுவ வெளிப்பட்ட
கள்ளக்கம்பனை எங்கள் பிரானைக்
காணக்கண் அடியேன் பெற்றவாறே"

என்பது அப்பகுதி,

அடுத்து, நிறைவாக மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வே! என்கிருர். மலயத்துவசன் பெற்ற பெருவாழ்வு மட்டுமா அம்மை! மண்ணுலக உயிர்கள் அனைத்தின் வாழ்வாகவும் அல்லவா அவள் விளங்குகிருள். இக்கருத்தில் தான், இறைவனைக் குறிக்கவந்த மணிவாசகர், "போற்றி என் வாழ்முதலாகிய பொருளே" என்று திருப்பள்ளி எழுச்சியில் இறைவனை வாழ்வாக மட்டுமல்ல வாழ்வின் முதலாகவும் ஓதுகிருர்.

வாழ்த்து :

இத்தகைய இறைவியை வாழ்வாக வாழ் முதற்பொருளாகக் கொண்டு வாழ்ந்து குருவருளின் வழி இறையடி நிழல் எய்திய குமரகுருபர முனிவரைப் போற்றி வாழ்த்துவோமாக.

இந்தப் புண்ணியப் பெருவிழாவினைத் தக்க வகையில் ஏற்பாடு செய்த விழாக் குழுவினர்க்கும் சிறப்பாகக் காஞ்சித் தொண்டை மண்டல ஆதீன மகாசந்நிதானமவர்கட்கும் கலந்து கொண்ட அன்பர்கள் அனைவருக்கும் எல்லா நலன்களும் பெருகவும் மன்னுயிர்கள் இறையருள் நாட்டத்தில் இருந்து துன்பம் நீங்கி இன்புறவும் ஸ்ரீசெந்தமிழ்ச் சொக்கன் திருவருளைச்சிந்திக்கின்ருேம்.

தில்லைவனம் காசி திருவாரூர் மாயூரம்
முல்லைவனம் கூடல் முதுகுன்றம் — நெல்லைகளர்
காஞ்சிகழுக் குன்றமறைக் காடருணை காளத்தி
வாஞ்சியமென் முத்தி வரும்

— குருஞானசம்பந்தர்.

கட்டுரை எண். 18.

போதமும் சித்தியும்

டாக்டர். திரு. மு. சிவச்சந்திரன்

சிவஞான சித்தியாரின் ஆசிரியர் இறைவனின் தன்மைகளைப் பலவாருக விரித்துக் கூறுகின்ருர். இறைவன் அருவமே என்று கூறுதல் பொருந்தாது என்பது முன்னர்ச் சிந்திக்கப் பெற்றது. இனி, முதல்வனின் உருவம் அருள்வடிவம் என்பதை அருள்நந்தி சிவாசாரியார் விளக்குகின்ருர்.

அருள்வடிவே ஆண்டவனின் வடிவம் :

முதல்வனது உருவம் அருள்வடிவம் ஆதலால் அப்பெருமானின் குணங்களும் கரணங்களும் அருள்வடிவமே ஆகும். அத்திருவுருவிலே தோன்றும் தொழில்களும் அருள்வடிவே ஆம். அத்திருமேனியிலுள்ள திருக்கை, திருவடி முதலிய பிரத்தியங்கங்களும் சூலம் மழு முதலிய சாங்கங்களும் அருளவடிவமே ஆகும். வஸ்திரம், மாலை முதலிய உபாங்கங்களும் அருள்மயமானதே ஆம். இவ் அருள்வடிவம் எல்லாம் தனக்கொதும் பயன்பாடு இன்றி உயிர்களின் ஈடேற்றத்தின் பொருட்டே இறைவன் எடுத்துக்கொண்டனன்.

“ உருவருள் குணங்களோடும் உணர்வருள் உருவிற்ருேன்றும்
கருமமும் அருள் அரன் தன் கரசரணுதி சாங்கம
திருவ் அருள் உபாங்கம்எல்லாம் தானருள் தனக்கொன்றின்றி
அருளுரு உயிருக்கென்றே ஆக்கினன் அசிந்தன் அன்றே ’’

இப்பாடலில், சாங்கம் என்பது ச + அங்கம் எனப்பிரித்துப் பொருள் காணக் கூடியது. அங்கத்தோடு கூடிய சூலம், மழு போன்றவற்றை அது குறிக்கிறது. இவ்வாறு வருவன சூலம், மழு, வாள், வச்சிரம், அபயம், நாகம், பாசம், அங்குசம், கண்டாமணி, அங்கி என்னும் பத்தும் ஆகும். உபாங்கம் என்பது உப + அங்கம் என்று பிரித்துப் பொருள் காணக் கூடியது. அருகில் இருக்கும் பொருள்களை இந்த உபாங்கம் என்பது குறிக்கும். வஸ்திரம், உபவீதம், மாலி, சந்தம், ஆபரணம், ஆசனம், ஆவரணம் என்பன அவை. ஆவரணம் என்பது சட்டி; ஆசனம் என்பத புலித்தோல முதலிய இருக்கை ஆகும்.

இப்பாடலில் இறைவனின் அங்கம், பிரத்தியங்கம், சாங்கம், உபாங்கம் ஆகியன குறிக்கப் பெறுகின்றன. அங்கம் – திருமேனி; பிரத்தியங்கம்–உறுப்புக்கள்; சாங்கம்–உறுப்பில் தொடர்புடையன; உபாங்கம் - அருகில் இருந்து பயன்பெறவன. இவை அனைத்தும் அருள்மயமானவை என்பது முடிந்த பொருள். அசிந்தன் என்றால் சிந்திக்கப்படாதவன் என்று பொருள்.

இறைவன் உலகரில் ஒருவன் அல்லன் :

அடுத்து இத்தகைய உருவத் திருமேனி கொண்ட இறைவன் உலகத்தாருள் ஒருவரா? என்னும் கேள்வியை எடுத்துக் கொண்டு விடை தருகிறார் ஆசிரியர்.

இறைவனின் உருவம், உலகினைக் கடந்து நின்றது; இதனால் தான், வேதத்துள் உருத்திரனை விசுவாதிகன் என்று கூறுவர். விசுவாதிகன் எனில், விசுவம் – உலகம்; அதிகன் – மேம்பட்டவன் என்றாகி உலகிற்கு மேம்பட்டவன் என்பது பொருள்.

இவ்வுலகம் உருத்திரனாகிய முதல்வனின் திருவுருவிலே தோன்றி ஒடுங்கும்; இதனால் தான் வேதத்துள் உருத்திரன் விசுவ காரணன் எனப்பட்டான். விசுவம்-உலகம்; காரணன்-காரணமாக இலங்குபவன்.

இவ்வுலகத்திற்கு இறைவன் உயிராய் இருக்கிறான்; அதனால் தான் வேதத்துள் உருத்திரன் விசுவாந்தரியாமி எனப்பெற்றான். விசுவம்-உலகம்; அந்தர்யாமி-உள்ளே நின்றியக்குபவன். அந்தர்-உள்; யாமி- நடத்துபவன். உலகிற்கு இறைவன் உயிராய் இருப்பது எங்ஙனம் எனில், தான் அசைந்தவழி உலகமும் அசையும்படி எங்குமாய் நிற்றல் ஆகும்.

உலகம் என்ற ஒன்று வேறில்லாமல் உலகமே தானாக நிற்றல் இறைவனின் இலக்கணம். அதனால் தான் வேதத்துள் உருத்திரன் விசுவரூபி எனப்பெற்றான். விசுவம்-உலகம்; ரூபி-உருவம் ஆனவன்.

இக்கருத்துக்களை நுண்ணிதாக வேதமும் அருள் நூல்களும் கூறியிருக்கவும் இதனை உணராதவர், இறைவன் உலகத்திலே உள்ளவருள் ஒருவன் என்று கூறுகிறார்.

'' உலகினை இறந்து நின்றது அரனுரு என்பது ஓரார்;
உலகவன் உருவில் தோன்றி ஒடுங்கிடும் என்று ஓரார்;
உலகினுக்கு உயிருமாகி உலகுமாய் நின்றது ஓரார்;
உலகினில் ஒருவன் என்பர் உருவினை உணரார் எல்லாம் ''

என்னும் பாடலில் மேற்சொன்ன கருத்துக்கள் விளக்கப் பெறுகின்றன.

தேவரில் ஒருவனும் அல்லன் :

அடுத்து, இறைவனைத் தேவரில் ஒருவன் என்று சிலர் கூறுவர். இதற்குரிய மறுப்பினை ஆசிரியர் தருகின்றார்.

இறைவன் பிர்மா, விஷ்ணு, உருத்திரன் ஆகிய மூவரிடத்து அதிட்டித்து நின்று அருள்கின்றான் என்றும் அர்த்தநாரீசுவரர் வடிவங்கொள்ளுவன் என்றும் அயன்மால் அறிய வொண்ணா அழல் வடிவமானான் என்றும் இலிங்கத் திருமேனியினின்றும் இவ்வுலகத்தைத் தோற்றுவிப்பன் என்றும் கூறும் புராணக் கருத்துக்களே, இறைவன் மூவரில் ஒருவன் அல்லன் என்பதற்கும், தேவர்களில் ஒருவன் அல்லன் என்பதற்கும் சான்றுகளாம். இக்கருத்துக்களை,

"தேவரில் ஒருவன் என்பர்; திருவுருச் சிவனைத் தேவர்
மூவராய் நின்றது ஓரார்; முதலுருப்பாதி மாதர்
ஆவதும் உணரார்; ஆதி அரி அயற்கு அறிய வொண்ணா
மேவுரு நிலையும் ஓரார்; அவன் உரு விளைவும் ஓரார்"

என்னும் பாடல் விளக்குகிறது.

(தொடரும்)

அட்டைப்பட விளக்கம்

ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபம்
397 - வடக்கு மாசிவீதி, T. S. No. 244,
குருநாதன்கோயில்தெரு, மதுரை,

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் திருவுளப்பாங்கின் வண்ணம் மதுரை வடக்கு மாசி வீதி, ஸ்ரீ குருஞானசம்பந்தர் திருமடத்தின் பிற்பகுதியில் குருநாதன் கோயில் தெருவில் T. S. No. 244. புதிதாகக் கட்டப்பெற்றுள்ள 100×36 அளவுள்ள ஸ்ரீ சொக்கநாதர் திருமண மண்டபத் திறப்புவிழா அண்மையில் நடைபெற இருப்பதை முன்னிட்டு ஸ்ரீ மீனாட்சிசுந்தரேசர் திருமண ஓவியம் "ஞானசம்பந்தம்" இதழ் அட்டையில் காட்சி தருகின்றது.

குமரகுருபரரும் வேமனரும்

டாக்டர். திரு. இரா. செல்வக்கணபதி,
எம். ஏ., பி. எட்., பிஎச். டி.,

"உலக மொழிகளின் வேறுபட்ட இலக்கியங்களில் மன்னும் உறவை இணைத்துக் காட்டலே ஒப்பிலக்கிய இயல்பின் நோக்கமாகும்" என்பார் ஆன்சர் ஜே. காம்பெல். இக்கருத்திற்கேற்ப, இருவேறு மொழிகளின் இலக்கியங்களை ஒப்பிட்டு ஆராயும்போது, உலக இலக்கியப் பொதுமைக் கூறுகளை நாம் காண இயல்கின்றது. கவிஞர்கள் வாழ்கின்ற சமுதாயம், காலம், பண்பாடு ஆகியவை அவர்கள் படைப்புகளில் பாதிப்பினை ஏற்படுத்துவன. ஆயினும், மாறுபட்ட சூழல்களில், வேறுபட்ட மொழிகளில், படைப்புகள் அமையினும் சில கவிஞர்களின் இதயவெளியீட்டில் ஒற்றுமைப் பண்பு ஒலிப்பது இயல்பானதுஎன்பதை ஒப்பியல் ஆய்வுகள் எடுத்து உரைக்கின்றன. அவ்வகையில் கி. பி. பதினேழாம் நூற்றாண்டில் வாழ்ந்த தமிழ்க்கவிஞர் குமரகுருபரரின் பாடல்கள் இங்குத் தெலுங்கு கவிஞர் வேமனரின் பாடல்களுடன் ஒப்பிடப்பெறுகின்றன.

கால ஒப்புமை

குமரகுருபரரின் வாழ்க்கைக் குறிப்பு !

திருநெல்வேலி மாவட்டம் ஸ்ரீ வைகுண்டத்தை அடுத்த கயிலாயபுரத்தில் சண்முக சிகாமணி கவிராயருக்கும், சிவகாமி அம்மைக்கும் குமரகுருபரர் மகவாய்ப் பிறந்தார். ஐந்து வயதுவரை ஊமையாக இருந்து திருச்செந்தூர் முருகன் அருளால் ஊமைத் தன்மை நீங்கப்பெற்றுக் 'கந்தர் கலிவெண்பா' என்ற நூலைப் பாடினார். முருகன் அருள் பெற்றபின், வாக்குத் தடைப்படும் இடத்தில் குருநாதரைப் பெறுவீர்! என்று அசரீரி இவருக்கு உரைத்தது. தருமை ஆதீனம் மாசிலாமணி தேசிக சுவாமிகளைத் தரிசித்தபோது, அசரீரி கூறியது போலவே இவருக்கு வாக்குத் தடை ஏற்பட, அவரையே குருநாதராகக் கொண்டு சைவத்துறவு பெற்றார்.

இவர் பல நூல்கள் இயற்றிப் பல தலங்களுக்கும் சென்ற பின் காசிக்குச் சென்று கங்கைக்கரையில் திருமடம் அமைத்தார். 'குமாரசாமி மடம்' என்று அது இன்றும் நிலவுகின்றது. இவர்

மூன்று முறை தருமை வந்து காசி மீண்டுள்ளார். இவர் தோற்று வித்த மடம் தஞ்சை மாவட்டம் திருப்பனந்தாளில் 'காசிமடம்' என்ற பெயரில் விளங்குகின்றது.

குமரகுருபரர் காலத்தில் இவரை மதித்துப் போற்றிய மன்னர், திருமலை நாயக்கர் என்றும், திருமலை நாயக்கர் காலம் கி. பி. 1623 முதல் 1659 வரை என்றும், கி. பி. 1630 முதல் 1648 வரை குமரகுருபரர் தென்னாட்டிலே சைவசமயத்தை நிலைநாட்டினார் என்றும் கா. சுப்பிரமணியப்பிள்ளை கூறுகின்றார். குமரகுருபரரின் வரலாற்று நிகழ்ச்சிகளை அடிப்படையாகக்கொண்டு, குமரகுருபரர் தோன்றிய காலம் கி. பி. 1618 க்கும் கி. பி. 1654 க்கும் இடைப் பட்டதென்று ஆ. கந்தசாமி கருதுகின்றார். இச்சான்றுகளின் அடிப்படையைக் கொண்டு குமரகுருபரர் கி. பி. பதினேழாம் நூற்றாண்டின் முற்பகுதியில் வாழ்ந்தவர் என அறிகின்றோம்.

வேமனரின் வாழ்க்கைக் குறிப்பு :

'வேமனசூக்தி ரத்னாகரமு' என்ற நூலின் முன்னுரையில், 'வேமன சரித்திரம்' என்னும் பகுதியில் வேமனரது வரலாறு பின் வருமாறு உள்ளது.

கி. பி. 1323 முதல் கி. பி. 1428 வரை 'கொண்ட வீடு' பகுதியை ஆண்ட கோமட்டிரெட்டி அரசர்களுள், இறுதி அரசன் இராசவேமா ரெட்டி. அவன் தம்பி வேமனர். இவ்விருவரும் கோமரகிரிக்குப் பிள்ளைகள். இவர்களின் தாய் மல்லம்மா.

'அபிராமய்யா' என்ற ஆச்சாரி, தத்துவ உபதேசத்திற்காக 'இலம்பிகா சிவயோகி'யைப் பிறரறியாமல் தொழுது வந்தார். அபிராமய்யாவுக்கு உபதேசம் செய்வதற்காக யோகி குறிப்பிட்ட நாளை வேமனர் மறைந்திருந்து அறிந்துகொண்டார். குறிப்பிட்ட நாளில், அபிராமய்யாவை சிவயோகியிடம் செல்லவிடாமல் நிறுத்தி, தாம் உபதேசம் பெறச் சென்றார். சென்றவர், அபிராமய்யா வர முடியாத காரணத்தால் தம்மை அனுப்பியதாகக் கூறி உபதேசம் பெற்றார். அன்றுமுதல் வேமனர் ஞானியானார். ஞானியானபின் அபிராமய்யாவிடம் மன்னிப்புப் பெற்று, பலஇடங்களுக்குச் சென்று மக்களுக்கு அருள்வழி காட்டி, இறுதியில் 'கடாருபல்லெ' என்னும் கிராமத்தில் உயிர் நீத்தார்.

வேமனரின் காலம், 16 ஆம் நூற்றாண்டு எனக் காம்பெலும், 18 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் என மாக்டோனட்டும், 14 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவர் எனப் பூர்ணயாச்சாருலுவும், கூறியுள்ளதாக என். தர்மாரெட்டி குறிப்பிடுகின்றார். சி. பி பிரௌன்,

என். கோபி, கந்தம் அப்பாராவ், என். தர்மரெட்டி ஆகியோர், வேமனர் 17 ஆம் நூற்றூண்டைச் சேர்ந்தவர் என்கின்றனர், மேற்கூறப்பட்டவற்றுள், பெரும்பாலமைச் சான்றுகள் 17 ஆம் நூற்றூண்டில் வாழ்ந்தவர் வேமனர், என்று கருதுவதற்கு இடமளிக்கின்றன. எனவே, வேமனரை 17 ஆம் நூற்றூண்டினராகக் சொல்வதே பொருத்தமாகும்.

கருத்து ஒப்புமை :

அரசியல், இல்வாழ்வு, கல்வி, சமயம், பொதுநீதி இவை பற்றியெல்லாம் குமரகுருபரும் வேமனரும ஒத்த கருத்துடையவர்களாக, ஒருவர் கருத்துக்கு இன்னொருவர் விளக்கம் தருவதாகப் பாடிச் செல்கின்றனர்.

அரசியல் :

அரசின் பெருமையை இனிது விளக்குமிடத்துக் குமரகுருபரர், "குலமகட்குத் தெய்வம் கணவன்; புதல்வர்களுக்குத் தந்தையும் தாயும் தெய்வம்; துறவிகளுக்கு ஆசிரியர் தெய்வம்; எல்லார்க்குந் தெய்வம் அரசன்" என்கின்றார். எல்லா மக்களின் நல்வாழ்விற்கும் அரசனே பொறுப்புடையவன் என்பதால் அரசனை அனைவருக்கும் தெய்வமாகக்கூறி அரசனின் கடமையை உய்த்துணர வைக்கின்றார். தெய்வம் போன்ற அரசன், கருணையோடு குடிகளைக் காவானுயின் நல்லநாடு வாய்த்ததாயினும் அரசாட்சி சிறப்படையாது என்பதை

" கண்ணிற் சொலிச்செவியி னேக்கு மிறைமாட்சி
புண்ணியத்தின் பாலதே யாயினுந் — தண்ணளியால்
மன்பதை யோம்பாதார்க் கென்னும் வயப்படைமற்
றென்பயக்கு மாணல் லவர்க்கு "

என்ற நீதிநெறிவிளக்கப் பாடல்மூலம் புலப்படுத்துகின்றார். இங்கு, கருணையற்ற அரசன் கையிலுள்ள வாட்படை, அவனுக்கு எவ்விதச் சிறப்பையும் தராது; அவன் வீரனும் ஆகான்; கருணையே அரசனுக்குத் தேவையான ஆயுதம் என்று கூறியுள்ளமை நினைக்கத்தக்கது.

வேமனரும், "அரசன் தன்பதவிச் செருக்கால், கருணையின்றி இருப்பானுயின், அவனது தீயகுணத்தால் அழிந்துபோவான்" என்பதை நீரின் மீது கல் நிற்காமல் மூழ்கி அமிழ்வதை உவமையாகக்கூறி விளக்குகின்றார். நீரின் மீது விழுந்த கல் முழுகுவது உறுதி; அதுபோல, குணமற்ற அரசன் அழிவதும் உறுதி என்பது இக்கருத்தால் உணர்த்தப்பட்டது.

பேரரசர்களுடைய தயவைப் வெளிப்படுத்திக்கொண்டு, ஏழை மக்களுக்குத் துன்பத்தை உண்டாக்கக் கூடாது என்பதை,

" ஏழைமக்களுக்கு அரசன் கொடுமையிழைத்தால்
அக்கொடுமை அவனையே தாக்குவது உறுதி;
மேலே வீசிய பந்து மேலேயே தங்காது; அது
மீண்டும் பூமியை அடைதல் உறுதி. ''

என்று எச்சரிக்கின்றார். ''எகுர வேயு பந்து வெந்தகதிலுசாரா?'' (உயரே வீசிய பந்து, எவ்வளவு நேரம் நிற்கும்) என்ற உவமை, மக்களுக்குத் தீங்கிழைத்த மன்னன் எவ்வளவு காலம் தம் குற்றத்தினின்றும் தப்ப இயலும்; அவனால் இழைக்கப்பட்ட கொடுமை அவனையே மீண்டும் வந்து தாக்கும் என்பதை உணர்த்துகின்றது'

இல்வாழ்வு :

இல்வாழ்வு ஒளிபெற்று விளங்க வேண்டுமானால் இல்லாள் பண்புடையவளாக, கற்புநலம் அமையப் பெற்றவளாகத் திகழ வேண்டும் என்கின்றார் குமரகுருபரர். இதனை,

" கற்பினையே ஆடையாக உடுத்து, அன்பினையே மலராகச்
சூடி, நாணமாகிய பெண்மைப் பண்பையே சாந்தாகப்
பூசி, நற்குணங்களும் நற்செய்கைகளுமாகிய ஆபரணங்களை
அணிந்தவளாக மனையாள் திகழவேண்டும்: அப்படிப்
பட்டவளை மனைவியாகக் கொண்டவனுக்குச் செய்யக்
கிடக்கும் தவம் வேறு இல்லை. "

எனவரும் நீதிநெறிவிளக்கக் கருத்தால் (பாடல் 81) அறியலாம்.

வேமனரும், "நற்குணமுள்ள மனைவியை உடைய மனிதனுக்கு வேறு சுவர்க்கம் தேவையில்லை'' என்கின்றார். வேமனர் தம் கருத்தை மிகச் சுருக்கமாகக் கூறினும், இல்வாழ்க்கை இன்புற்று அமைவது இல்லாளைப் பொறுத்ததே என்பதை இவர் கருத்தின் மூலம் தெளிவாக அறியமுடிகின்றது.

கல்வி !

இம்மையில் இன்பத்தையும், மறுமையில் வீடுபேற்றையும் அளிப்பது ஞானமார்க்கக் கல்வி என்று கருதுபவர் குமரகுருபரர். இம்மையில் மனக்கவலை வந்தவிடத்து, அதனைப்போக்கும் மருந்தாகக் கல்வி விளங்குவதால், மக்களுக்குக் கல்வியைவிடச் சிறந்த துணை வேறொன்று இருக்கமுடியாது என்பதை,

" அறம்பொரு ளின்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் — உறுங்கவலொன்
றுற்றுழியுங் கைகொடுக்குங் கல்வியினூங் கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை "

என்ற பாடலில் குமரகுருபரர் உறுதியாகக் கூறுகின்றார்.

வேமனரும், "கல்வி எல்லோருக்கும் மிகமிக இன்றியமையாதது; கல்வியில்லாதவன் வாழ்வில் இன்பத்தைப் பெற மாட்டான்" என்று கூறுகின்றார்.

மறுமையில் வீடுபேற்றைத் தருவது கல்வி என்று குமரகுருபரர் கூறுவதுபோலவே வேமனரும் படித்துப்படித்து விணாஇறக்காமல் இறவாமலிருக்கும் பாடம் படிக்குமாறு அறிவுறுத்துகின்றார்.

" சதிவி சதிவி சொந்த சதுவங்க சதுவங்ச
சதுவு சதிவி யிங்க சதுவு சதினி
சதுவு மர்ம முலது சதுவ லேடய் பொர "

என்ற பாடலில், கல்வியின் பயன் ஞானமார்க்கம் உணர்தல் என்பதை வேமனர் புலப்படுத்துகின்றார்.

சமயம் :

குமரகுருபரர் சைவ சமயத்தைச் சார்ந்தவராயினும் சமயக் காழ்ப்பற்றவர். 'இறைவன் ஒருவன்' என்ற கொள்கையுடையவர். நாம் செய்கின்ற செயல் அனைத்தையும் எங்கும் நிறைந்துள்ள ஒருவன் காண்பான் என்ற உணர்வுடன், இறைவனுக்கு அஞ்சி வாழவேண்டும் என்பதை,

" எங்கும் உளனொருவன் காணுங்கொ லென்றஞ்சி
அங்கம் குலைவ தறிவு "

என்ற (நீதிநெறிவிளக்கப் பாடல் 94) பாடலில் அறிவுறுத்துகின்றார். வேமனரும் இறைவன் ஒருவனே என்பதை,

" பசுக்களின் நிறங்கள் வேறுபட்டாலும் அவைதரும்
பாலின் நிறம் ஒன்றே; பூக்கள் பலவகையாயினும்
அவற்றால் செய்யப்படும் வழிபாடு ஒன்றே;
அறநெறிகள் வேறுபடினும், அவை குறிப்பிடும்
இறைவன் ஒருவனே "

என்று பல்வேறு உவமைகளால் உணர்த்துகின்றார்.

பொதுநீதி :

சொற்கள் இனிமையாக அமைவதுடன், செயலும் சிந்தையும் தூய்மையுடன் துலங்குவதே நல்லொழுக்கம் என்று கூறுகின்றார் குமரகுருபரர். "பொய், புறங்கூறல், கடுஞ்சொற்கள் பேசுதல், பயனில கூறல் என்ற நான்கு குற்றங்களும் சொற்களில் வராமல் காத்தும், ஐம்புலன்களையும் அடக்கியாண்டும், மனமாசுகளை நீக்கி எச்செயலையும் செய்தலே நல்ல ஒழுக்கமாகும்." என்று குமரகுருபரர் அறிவுறுத்துகின்றார்.

குமரகுருபரர் சுருக்கமாகக் கூறியதையே, வேமனர் தனித் தனிப் பாடல்களில் விரிவாகக் கூறுகின்றார். வேமனர்,

" தப்புலென்னவாரு தண்டோப தண்டம்பு
லுர்வி ஜனுல கெல்லனுண்டு தப்பு "

"உலகினில் பிறர் தவற்றை எடுத்துரைப்போர் எண்ணற்றோர். தனது தவற்றை உணர்பவர் அரிது" என்று இப்பாடலில் புறங் கூறுவதைப் பழிக்கின்றார்.

மேலும், "பயனற்ற சொற்களைப் பேசித் தொண்டைக்கு வீண்வலி உண்டாக்கிக் கொள்பவருக்குச் சான்றோரிடம் மதிப்பு இல்லை" என்றும் கூறுகின்றார். கடுமையான சொற்களால் பிறர் மனத்தைப் புண்படுத்துவது கூடாது; அங்ஙனம் செய்தால் மனம் உடைந்துவிடும். உடைந்த மனத்தை மீண்டும் சேர்க்க முடியாது என்பதற்கு, இரும்பு விரிந்தால் அதை முறையாகக் காய்ச்சி அடித்துச் சேர்க்கலாம். மனம் விரிந்தால் சேர்க்கமுடியாது என்கின்றார் வேமனர். இதனை,

" இனமு விரிகெதேனி இனுமாரு மும்மாரு
காசி யதுவச்சி கரமமு கானு
மனசு விரிகதேனி மரிசேர்ச்ச ராதயா "

என்ற வரிகளால் உணர்த்துகின்றார்.

எனவே, புறங்கூறுதல், பயனற்ற சொற்களைக் கூறுதல், பிறர் மனம் புண்படும்படியான கடுஞ்சொற்களைக் கூறுதல் ஆகியன தவிர்த்து வாழ்தலே நல்லொழுக்கப்பண்பு என்று குமரகுருபரரும், வேமனரும் எதிர்மறைப்பண்புகளைக் கடிந்துரைக்கக்காண்கின்றோம்.

இவ்வாறு, குமரகுருபரரும் வேமனரும் மொழியால் வேறு பட்டாலும், காலத்தாலும், கருத்தாலும், கருத்தை உணர்த்தும் முறையாலும் ஒன்றுபட்டு விளங்குகின்றனர்.

வீட்டிலிருக்கும் பெண்கள்

பெண்கள் வேலைக்குப் போய்ச் சம்பாதிப்பது என்பது இன்று ஃப்பாஷனாகி (நாகரிகம்) விட்டது. தேவைக்காக என்று மட்டும் இல்லாமல் ஒரு பொழுதுபோக்காய் நினைத்து வேலைக்குப் போகும் பெண்கள் பலர் உண்டு. ஒரு கௌரவமாய் நினைத்து வேலைக்குப் போகும் பெண்களையும் காணலாம். மேலும், வேலை செய்து சம்பாதிப்பதுதான் சுதந்திரப் பெண்ணுக்கு அடையாளம் என்ற தவறான கருத்து இன்று உலவுகின்றது. எந்த ஒரு பெண்ணும் தன் சொந்தக் காலில் நிற்கும் வலுபெற்றிருக்க வேண்டியது அவசியம் தான். என்றாலும், வேலைசெய்து சம்பாதிப்பது என்பது, பெண்களைப் பொருத்தமட்டில், அவரவர் விருப்பத்தைப் பொருத்தது.

இதனால், வெளியே போய் வேலை செய்து சம்பாதிக்காத பெண்கள் தாம் படித்த கல்வி அடுப்படியில் வீணாவதாகத் தவறாக எண்ணி வருந்த வேண்டாம், ஏனெனில் கல்வி வேலை வாய்ப்புக்காக மட்டுமல்ல; அறிவு வளர்ச்சிக்காகவும்தான். 'ஓர் ஆண் மகன் கற்றால் அவன் மட்டும் பயனடைகிறான்; ஒரு பெண் கற்றால் அவளால் மொத்தக் குடும்பமே பயனடைகின்றது' என்றார் சாவித்திரிபாய் பூலே என்கிற, பெண் கல்விக்கு அடிக்கல் நாட்டிய மராட்டி அம்மையார். அது உண்மைதான். கற்ற பெண் அறிவு பூர்வமாகச் சிந்தித்து ஆக்கப்பூர்வமான காரியங்களைத் தன் குடும்பத்திற்காகச் செய்ய முடியும். தன் பிள்ளைகளுக்கு, தான் பெற்ற ஞானத்தைக் கொடுத்து அவர்களை நல்வழியில் நடத்த முடியும். வாழ்க்கையில் ஏற்படும் இன்னல்களை நம்பிக்கையுடன் சந்தித்துத் திறமையுடன் தீர்க்க முடியும். எனவே, படித்துப் பட்டம் பெற்ற பெண் வீட்டில் வெறும் குடும்பத் தலைவியாய் மட்டுமே பணியாற்றுவதால் அவள் இழப்பது ஒன்றுமில்லை; மாறாக, அவளால் அவளுடைய குடும்ப அங்கத்தினர்கள் பெறும் லாபம் அபரிமிதமானது.

வேலைக்குப் போகும் பெண்கள் திருமணச் சந்தையில் சீக்கிரம் விலை போவது மறுக்க முடியாத உண்மைதான். இதற்காக மட்டு மல்லாது வீட்டின் பண நெருக்கடியைச் சமாளிக்கவும், தனக்குக் கணவனாக வரப்போகிறவன் கேட்கிற லஞ்சத்தொகையை (வரதட்சணை) சேர்க்கவும் பெண்கள் வேலைக்குப் போகும் கட்டாயத்

கிறுவினாகிருர்கள். பெண்மையை மதிக்கத் தெரியாத சில குடும்பங்களில் தன் உரிமையை நிலை நாட்டிக் கொள்ளப் பல பெண்கள் வேலைக்குப் போகும்படியாகிறது.

படித்து, பட்டம் பெற்ற பெண்கள், படிக்காத பெண்கள் என்று பலர் இன்று வீட்டில் வெறும் குடும்பத் தலைவியாக இருக்கிருர்கள். சில மாமியார்கள், கணவன்மார்கள் இவர்கள் வேலை செய்து சம்பாதிக்கவில்லையே என அதிருப்திப்படுவது உண்டு. சம்பாதிக்காதவள் என்பதால் அவளை அலட்சியப்படுத்துவதும் உண்டு.

பெண் என்கிற அன்பு ஊற்று, தன் குடும்பத்தைப் பேணிச் சரியான பாதையில் நடத்திச் செல்லும் குடும்பத் தலைவி அல்லவா? குடும்பத்திற்குத் தேவையான பொருளை ஈட்டுவதும், குடும்ப நிர்வாகத்தில் மனைவிக்குத் துணை செய்வதும் ஆண்மகனின் கடமையல்லவா? ஆனால், பெண்ணை ஒரு போகப் பொருளாகவும், தனக்கு அடிமையாகவும் ஆண்கள் கருதி அவளை நடத்தத் தலைப்பட்டதால்தான் பெண்களும், 'தாம் எதிலும் குறைந்தவர்களல்ல' என்பதை நிரூபிக்கப் பொருளீட்டக் கிளம்பிவிட்டார்கள். இவளுடைய இந்தப் புரட்சி, பெண்ணடிமைத்தனத்தை ஒழிக்கும் முதல் எதிர்ப்புக் குரலாயினும் அவளுடைய குடும்பத்திற்குப் பேரிழப்பே. எனவே, குடும்பத்தைப் பேணும் வீட்டுத் தலைவி வேலைக்குப் போய் சம்பாதிக்காமலிருப்பது எந்த விதத்திலும் அவளுடைய குடும்பத்துக்கு இழப்பாகாது.

பல கணவன்மார்கள்தான் கஷ்டப்பட்டுச் சம்பாதித்து வருகையில், மனைவி உண்டு, உறங்கி வீட்டில் பொழுதை வீணாகக் கழிக்கிருள் என மனம் பொருமுவதுண்டு. வீட்டிலிருக்கும் பெண்ணின் தினசரி அலுவல்களைக் கணக்கிட்டால் இந்தக் கணவன்மார்களின் எண்ணம் தவருனது என்பது புலப்படும். அவள் தனக்கு மனைவி மட்டுமல்ல; தன் தாய்க்கு அவள் மருமகள், தன் பிள்ளைகளுக்கு அவள் தாய் என்பதைக் கணவன் அடிக்கடி மறந்துவிடுகின்ருன். குடும்பத்தில் ஒரு பெண் பல பாத்திரங்களை ஏற்று நடக்க வேண்டியிருக்கின்றது. இதனுல், அவள் வீட்டில் வெட்டிப் பொழுதைக் கழிக்கின்ருள் என்று சொல்வது அபத்தம்.

வீடு என்று இருக்கும் பொழுது அங்கு ஆயிரம் வேலைகள் இருக்கின்றன. ஆனுல், வெறும் சமையல் வேலைதான் கணவனின் கண்களுக்குத் தெரிகின்றது. சமையல் வேலையும் குறைவா என்ன! இரண்டு வேளை சிற்றுண்டி, இரண்டு வேளை சாப்பாடு என்று தயாரிக்கும் பொழுது நாளின் பெரும்பகுதி கழிந்துவிடுகின்றது.

பாத்திரம் கழுவுதல், துணி துவைத்தல், வீட்டைப் பெருக்கித் துடைத்துச் சுத்தம் செய்தல் ஆகிய வேலைகள் வெறும் நேரத்தை மட்டுமல்ல, அவளுடைய சக்தியையும் விழுங்கிவிடுகின்றன.

குழந்தை வளர்ப்பு என்பது சாமானிய காரியமா! குழந்தையைத் தாஜா செய்து குளிக்கப்பண்ணி, நிலாவையும், காக்கையையும் துணைக்கழைத்து அவனுக்குணவூட்டி, தாலாட்டி, உறங்கவைத்து என்று சின்னக் குழந்தைகள் தாயின் நேரத்தை ஆக்கிரமித்துக்கொண்டு விடுகின்றார்கள். வளர்ந்த பிள்ளைகளைச் சமாளிப்பது இன்னும் சிரமம். அவர்களுடைய தேவைகள் சின்னக் குழந்தைகளைவிட அதிகம். தாயின் பிடிக்குள் அடங்காமல் நழுவி ஓடும் இவர்கள்தான் அவளுக்கு அதிகத் தொந்தரவு கொடுக்கின்றார்கள். வளர்ந்த குழந்தைகள் சண்டைபோடத் தொடங்கி விட்டால் தலையை எங்கே போய் மோதிக்கொள்வது என்று தாய் தவித்துப்போகின்றாள். சொல்லுக்கு அடங்காத இந்த இரண்டுங் கெட்டான்களை என்ன செய்வது என்று அவள் தவிக்கும் தவிப்பை அனுபவிக்கும் தாய்மார்களால்தான் புரிந்து கொள்ள முடியும். இவர்களுக்கு ஈடு கொடுக்கத் தேவையான மன பலத்தைப் பொறுமைதான் கொடுக்கின்றது.

பிறகு, குழந்தைகளின் படிப்பு. பல குடும்பங்களில் குழந்தைகளின் படிப்பில்கூட வீட்டுத் தலைவன் கவனம் செலுத்துவதில்லை. அதையும் தாய்தான் கவனித்துக் கொள்கிறாள். பள்ளிக்கூடக் கட்டணம் கட்டுவதற்கும், ரேஷன் கடையில் மண்ணெண்ணெய் வாங்குவதற்கும்கூட அவள்தான் ஓடவேண்டியிருக்கிறது. விருந்து, மருந்து என்று அடிக்கடி ஏற்படும் கால, பண விரயத்தை அவள்தான் சமாளிக்கவேண்டியிருக்கின்றது. இந்நிலையில் தலைவலி, கால்வலி என்று வந்தால் படுத்து ஓய்வெடுக்க முடிகிறதா! யாராவது அவளுடைய உடல் உபாதைகளைப் பற்றி அக்கறை கொள்கிறார்களா! தலைவலி, கால்வலிகளோடு முக்கி, முனகித் தன் தினசரி வேலைகளை அவள் செய்கிறாள்.

வீட்டு வேலைகள் என்று மட்டுமல்ல, இன்னும் பல விதத்தில் வீட்டிலிருக்கும் பெண்களால் குடும்பத்திற்குப் பல நன்மைகள் உண்டாகின்றன. வீட்டிலிருக்கும் பெண் பெரும்பாலும் வேலைக்காரிக்கு என்று பணத்தை வீணாக்காமல் எல்லா வேலைகளையும் தானே செய்கின்றாள். துணிக்கு இஸ்திரிபோடுவது முதற்கொண்டு, எத்தனையோ அதிகப்படியான வேலைகளை இவள் செய்து பணத்தை மிச்சம் பிடிக்கின்றாள். களைத்து வீட்டிற்குச் செல்லும் கணவனை, சுத்தமான உடையில் நீட்டாக ஒரு புன்னகையுடன் வரவேற்க

வீட்டிலிருக்கும் மனைவியால் தான் முடிகின்றது. சுடச்சுடச் சிற்றுண்டியும் டீயும் அவளால் மட்டுமே தர முடிகின்றது. வீட்டின் இதர சில்லறைப் பிரச்சினைகளைக் கணவனின் காதில் போட்டு அவனைத் தொந்தரவு செய்யாமல் அவளே சமாளித்துக் கொள்கின்றாள்.

வேலைக்குப் போகும் பெண்கள் சம்பாதித்து வருவது மட்டுமே இந்தக் கணவன்மார்களின் கண்களில்படுகின்றது. அவர்களால் ஆகும் தவிர்க்க முடியாத செலவுகளை இவர்கள் எண்ணிப் பார்த்திருக்கமாட்டார்கள். போக்குவரத்துச் செலவு, வீட்டில் வேலைக்காரிக்குச் சம்பளம், குழந்தை காப்பகத்தில் கட்டவேண்டிய தொகை, குழந்தைகளுக்குத் தனியாக ஆசிரியரை வைத்துப் படித்துக் கொடுக்கச் செலவழிக்கும் பணம், துணிமணிகளின் சலவைச் செலவு என்று அவளுடைய சம்பளத்தில் பெரும்பகுதி கரைந்துவிடுகின்றது. எத்தனை தான் ஓடி ஓடி உழைத்தாலும் வீட்டிலிருக்கும் பெண்களைப்போல வேலைக்குப் போகும் பெண்களால் வீட்டை அத்தனை ஒழுங்காக, சுத்தமாக வைத்திருப்பது இயலாத காரியம். வாரத்தில் ஒரு நாள் சற்றே ஓய்வெடுக்கும் நேரத்தில் அல்லது குழந்தைகளுடன், கணவனுடன் வெளியே புறப்படும் சமயத்தில் வரும் விருந்தினர்களை முகம் கோணாமல், மனம் வாடாமல் உபசரிப்பது சிரமமான காரியம். தாயின் நெருக்கம் கிட்டாமல் தவிக்கும் குழந்தைகள், மனைவியின் களைத்த முகத்தையும், சலித்த குரலையும் சகித்துக்கொள்ளும் கணவன், ஓய்வு ஒழிவின்றி வேலை, வேலை என்று வாழ்க்கையைக் கடத்தும் அலுப்படைந்த மனைவி என்று அந்தக் குடும்ப வாழ்க்கை திருப்தியற்று ஓடுகின்றது.

எனவே, வீட்டிலிருக்கும் பெண்கள் எந்த வகையிலும் சுமையாக அமையவில்லை. இவர்களுக்கும் நாள் முழுவதும் வேலை இருக்கின்றது; மனச்சுமை, அலுப்பு இருக்கின்றது. இவர்களால் வீட்டுச் செலவு குறைகின்றது. 'அட போடி, நீ வீட்டிலே என்ன கிழிச்சுட்டே? வெட்டிச் சோறு தின்னுட்டு இருக்கிறே!' என்று வீட்டிலிருக்கும் மனைவியை மட்டமாகப் பேசும் கணவன்மார்கள் தயவுசெய்து தங்கள் தப்புக் கணிப்பை மாற்றிக்கொள்ளவேண்டும்.

நன்றி. — தினமணி (மதுரைப்பதிப்பு) இணைப்பு. 9—6—89.

வானங்காள் பெய்க மழை

சிவநெறிச்செல்வர், நெல்லைச் சிவமணி
புலவர் திரு. ம. சிவசம்பு, எம்.
பாளையங்கோட்டை.

தண்ணீர் தாயின் இன்னருள். "அவன் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்னப் பொழியாய் மழையே" என்பது மாணிக்க வாசகர் திருவாக்கு. அந்நீர் அமிழ்தம்.

"வான்நின்று உலகம் வழங்கி வருதலால்
தான் அமிழ்தம் என்றுணரற் பாற்று"

என்பது வள்ளுவர் வாக்கு.

நீர் இன்றேல் உலகம் இல்லை. நீர் வளம் மழையால் கிடைக்கிறது. மழை இல்லாது உயிர்கள் வருந்தும்பொழுதெல்லாம் அடியவர்கள் மக்களுக்காக இறைவனிடம் மழையை வேண்டிப் பெற்றார்கள். மழை அதிகம் பெய்து துன்பம் வந்தபொழுது அதை நிறுத்தவும் செய்தார்கள். இவ்வரலாற்றைத் திருமுறைகளிலும் பண்டாரச் சாத்திரங்களிலும் காணலாம்.

மழை பெய்வித்த மாதவர் :

தருமை ஆதீனம் 14 ஆவது குருமகாசந்நிதானம் கந்தப்ப தேசிக பரமாசாரிய சுவாமிகள் தென்னாட்டுத் தலயாத்திரையாகத் திருநெல்வேலிக்கு எழுந்தருளினார்கள். சிந்துபூந்துறைதிருமடத்தில் தங்கி இருந்தார்கள்.

அப்பொழுது நெல்லைப் பகுதியில் மழை இல்லை. நிலபுலங்கள் விளையவில்லை. குடிதண்ணீருக்குக்கூடப் பஞ்சம் ஏற்பட்டு மக்கள் மிகவும் வருந்தினார்கள். விவசாயிகள் பசியால் வருந்தினார்கள். அந்நேரத்தில் ஆங்கில அதிகாரிகள் வரிவசூலைக் கடுமையாக வசூலித்து வருத்தினார்கள். மக்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து கலெக்டரிடம் முறையிட்டார்கள். வரியைத் தள்ளுபடி செய்து எங்களைக் காப்பாற்றவேண்டும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

அப்பொழுது கலெக்டராக இருந்த ஆங்கிலேயதுரை, "மழை இல்லை என்று என்னிடம் சொல்லி என்ன பயன்? ஊருக்குப் புதிதாக வந்திருக்கும் உங்கள் பாதிரியார் (குருமகாசந்நிதானம்) அவர்களிடம் சொன்னால் அவர் மழை பெய்யச் செய்யமாட்டாரா? போய்ச் சொல்லுங்கள்" என்று ஏளனமாகக் கூறி அனுப்பிவிட்டார்.

மனம் வருந்திய மக்கள் தம் குருநாதர் கந்தப்ப தேசிகரிடம் கூறி முறையிட்டார்கள். அதனைக் கேட்ட குருமூர்த்திகள் சொக்கலிங்கப் பெருமானைப் பூசித்துத் தியானத்தில் அமர்ந்தார்கள். செந்தமிழ்ப் பாடல் ஒன்று சிந்தையில் தோன்றியது.

"சைவ சமயம் சமயமெனில் அச்சமயத்
தெய்வம் பிறைசூடும் தெய்வமெனில் — ஐவரைவென்று
ஆனந்த வெள்ளத்(து) அழுந்துவது முத்தியெனில்
வானங்காள் பெய்க மழை"

என்று பாடியருளினர்.

இப்பாடலைப் பாடியதும் வானில் மேகங்கள் எழுந்து உடையாளின்னத் திகழ்ந்து, ஆளுடையாள் இட்டிடையின் மின்னிப் பொலிந்து, எம்பிராட்டி திருவடிமேற் பொன்னஞ் சிலம்பில் சிலம்பித் திருப்புருவம் என்னச் சிலைகுலவி, நந்தம்மை ஆளுடையாள் தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு முன்னி அவள் நமக்கு முன் சுரக்கும் இன்னருளே என்ன மழை பொழிந்தது.

அம்மழையால் ஏரி, குளம், ஆறு, கிணறு எல்லாவற்றிலும் தண்ணீர் நிரம்பியது. மக்கள் ஆனந்தம் கொண்டனர். குருமூர்த்தி திருவடி வீழ்ந்து வணங்கினர்.

எளனம் செய்த கலெக்டர் துரை குருமூர்த்தி பெருமை அறிந்து வணங்கி, சொக்கலிங்கப் பெருமானுக்குக் காணிக்கையாக நூறு வராகன் தந்து வழிபட்டார். குருவருள் பெற்றார்.

மழையை வருவிக்கவும் குறைக்கவும் நடந்த அற்புதம் :

திருப்புன்கூர் மக்கள் மழை இல்லாமல் துன்புற்றனர் திருப்புன்கூரில் எழுந்தருளி இருக்கும் சிவலோக நாதரிடமும் சொக்கநாயகி இடமும் மழை வேண்டிப் பிரார்த்தனை செய்தார்கள்.

"பெருமானே நீர் மழை பெய்வித்து அருள் செய்யவேண்டும். மழை பெய்தால் உமக்குப் பன்னிருவேலி நிலம் எழுதிவைக்கிறோம்" என்று வேண்டிக் கொண்டனர்.

மழை பெய்து நீர் நிலைகள் எல்லாம் நிறைந்தது. பின் பெரு வெள்ளம் ஏற்படத் தொடங்கியது. மக்கள் துன்புற்றனர். இறைவனிடம் "பெருமானே! மழையை நிறுத்தும். உமக்கு மீண்டும் பன்னிருவேலி நிலம் தருகிறோம்" என்று வேண்டிக் கொண்டார்கள்; மழை நின்றது.

மழை பெய்தமைக்காகப் பன்னிருவேலி நிலமும், மழை நின்றமைக்காக மீண்டும் பன்னிருவேலி நிலமும் ஆக 24 வேலி நிலத்தை மக்கள் திருப்புன்கூர் இறைவனுக்காக எழுதிவைத்தனர். அப்படி நிலம் எழுதிக் கொடுத்த பெருமான் யார் தெரியுமா? நம் தம்பிரான் தோழரின் நண்பர் ஏயர்கோன் கலிக்காமர்தான்.

இவ்வரலாற்றைத் தெரிவிக்கிறார் சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருப்புன்கூர் பதிகத்தில்.

"வையகமுற்று மாமழை மறந்து
வயலில் நீரிலை மாநிலந் தருகோம்
உய்யக் கொள்கமற் றெங்களை என்ன
ஒளிகொள் வெண்முகி லாய்ப்பரந்(து) எங்கும்
பெய்யு மாமழைப் பெருவெள்ளம் தவிர்த்துப்
பெயர்த்தும் பன்னிருவேலி கொண்டருளும்
செய்கை கண்டுநின் திருவடியடைந்தேன்
செழும்பொழில் திருப்புன் கூருளானே" 6—55—2

திருப்புன்கூர்ப் பதிகம் மூன்றாம் பாடலில் நிலத்தைக் கொடுத்தவர் ஏயர்கோன்கலிக்காமர் என்பதை,

"நன்னிலம் ஈராறு வேலி (தந்த) ஏயர்கோன்"

என்று தெளிவாகக் குறிப்பிடுகிறார்.

இவ்வாறு மழை வேண்டிப் பெறவும், நிறுத்தவும் கொடுத்த இறையிலி நிலங்களை நாம் எடுத்துக் கொண்டால் மழைவளம் குறையாமல் என்ன செய்யும்!

இத் தவறுகளைத் திருத்தி மாதவர்களை வேண்டி மழை பெறுவோம்.

வான்முகில் வழாது பெய்க!

மேலை நாட்டுத் தத்துவ மேதைகள்

(Western Philosophers)

சுவாமி வீரபாகு

5. எபிக்யூரஸ் (Epicurus)

(கி. பி. 342–270)

(மலர் 48, இதழ் 8, பக்கம் 352 இன் தொடர்ச்சி.)

தவருகப் புரிந்து கொள்ளப்பட்ட தத்துவமேதை :

மேலைநாட்டுத் தத்துவமேதைகளில் தவருகப்புரிந்து கொள்ளப்பட்டு வரும் விவாதத்திற்குரிய வித்தகருமாவார் எபிக்யூரஸ் (Epicurus) இன்றும் கூட இவரது தத்துவத்திற்குப் பலர் தவருக விளக்கம் தருகின்றனர். "சாப்பிடு, குடி, மகிழ்ந்திரு – ஏனெனில் நாளை இறப்பு உன்னை எடுத்துச் சென்று விடும்" – இதுதான் எபிக்யூரஸின் தத்துவம் என எடுத்தியம்புபவரும் உண்டு. எபிக்யூரஸ் பலதுறை ஞானம் கொண்டவர் – விஞ்ஞானம், நீதி சாத்திரம் இவற்றில் இவர் கற்றுத் துறைபோகிய கல்விமான் ஆவார். இன்பக் கேளிக்கை நாட்டம் தான் இவரது தத்துவம் என இயம்புவது முற்றிலும் சரி அன்று.

எபிக்யூரஸ் பூங்காவின் எதிரொலி :

எபிக்யூரஸ் ஓர் அரிய பூங்கா ஸ்தாபனத்தை ஏற்படுத்தினார். அதன் எதிரொலியாக – பிரதியாக தெலிமீ திருமடம் (Abbey of Thaleme) அமைக்கப்பட்டது பற்றிச் சகோதரர் ரெபெலே (Brother Rebelai) தன்னுடைய கர்காண்டுவா (Gargantua) என்ற நூலின் முதற்பகுதியிலே விரிவாக எடுத்தோதுகிறார். அந்தத் திருமடம் ஃபே சீ கே வல்ட்ராஸ் (Fai Ce Que Vouldras) என்ற சமயப் பிரிவைச் சார்ந்தது. இக்கிரேக்க பதங்களுக்கு "நீ விரும்பியவாறு செய்" (Do as you Like) என்பது பொருளாகும். அவர் விரித்துரைப்பதன் சாரம் கீழே தரப்படுகிறது. இஃது ஓர் உலோகாயத மதத்தை ஒத்தது; எனினும் தத்துவம் என்ற ரீதியில் இதனைத் தெரிந்து கொள்ள வேண்டுவது அவசியமாகும்.

"கடமையை ஆற்றவோ கடவுளைப் பணியவோ நினைவுறுத்த இத்திருமடத்தில் கடிகாரங்கள் இல்லை. தூய்மை, எளிமை, பணிவு

ஆகிய முக்குணங்களுக்குப் பதிலாக இங்கு வாழும் ஆண் பெண் துறவியர் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்படுவர். போதுமான அளவு பொருள் தேடலாம். சுதந்தரத்தோடு வாழலாம். "மதவெறியர்களுக்கும், வஞ்சகர்களுக்கும், வழக்கறிஞர்களுக்கும், நீதிபதிகளுக்கும், வணிகர்களுக்கும், குடியர்களுக்கும், பொய்யர்களுக்கும், கோழைகளுக்கும், எமாற்றுக்காரருக்கும், திருடர்களுக்கும்" இம்மடத்தின் கதவுகள் என்றும் மூடப்பட்டிருக்கும். அதற்கு மாறாக இவ்விடம் மங்கையரையும், மகிழ்ச்சியையும் விரும்புபவர்களுக்கு வாழும் வீடாகும். உவகை, நகைச்சுவை, உற்சாகம், குதூகலம், அழகுணர்ச்சி, கவர்ச்சி, அன்பு, ஈர்ப்பு, இனிமை, கனிவு, அருமைப்பாடு, நுண்கலையுணர்வு, நிறைவுடைமை, அறிவுடைமை, சீரியகாதல் ஆகியவை கொண்டோர்க்கு இஃது புகலிடமாகும்"

இவர்களது அடிப்படை நோக்கம், உறுதியற்ற நாளை வாழ்வைப் பற்றி எதும் கருதாமையும், உறுதியான இன்றைய வாழ்வினைப் பற்றி மட்டுமே ஊன்றிக் கருதலுமாகும். (Their sole business is to disregard the uncertain life of tomorrow and to concentrate upon the certain life of today.)

எபிக்யூரஸ் வாழ்க்கை வரலாறு :

கிரேக்க நாட்டின் சமோஸ் (Samos) தீவில் கி. மு. 342 இல் எபிக்யூரஸ் பிறப்பெடுத்தார். இவர் தந்தை அதீனியன் நாட்டின் ஓர் ஆசிரியராவார். இவர் தாய் ஒரு மருத்துவ மந்திரவாதி இதன் காரணமாக எபிக்யூரஸ் இளமைமுதற்கொண்டே மூடநம்பிக்கையை எதிர்ப்பதில் முனைமை வகித்தார். இளமை முதற்கொண்டு இவருக்குத் தத்துவ சாத்திரத்தில் இணையற்றதோர் ஈர்ப்பு ஏற்பட்டது. பள்ளி ஆசிரியர் இவருக்கு "எல்லாம் குழப்பத்திலிருந்து (Chaos) உண்டாயிற்று" என்று போதித்தார். இவர், "குழப்பத்தினை உண்டாக்கியது யார் ஐயா?" என வினாக்கணை தொடுத்தார். ஆசிரியர், "உன் கேள்விக்கு விடை எனக்குத் தெரியாது. எவருக்கும் தெரியாது" என்றார். அப்போதே எபிக்யூரஸ் இவ்வினாவிற்கு விடைகாண, விளக்கமுற, தத்துவம் பயிலத் தொடங்கினார்.

பதினெட்டாம் வயதில் இவர் ஏதென்ஸ் வந்தார். அந்த நேரம் ஏதென்ஸ் அமைதியின்றி இருந்தது. இவர் அரசியல் துறையிலும் ஆன்மீகத் துறையிலும் புகுந்து ஆய்ந்தார். இவர் தேடிய செம்பொருள் அகப்படவில்லை. வறண்ட பாலைவனத்தில் வளமான சோலைவனத்தைக் கண்டாற்போல எபிக்யூரஸ் ஒரு கல்விப் பூங்காவை நிறுவினார். அதற்கு எபிக்யூரஸ் பூங்கா (The garden of Epicurus) எனப் பெயர் வழங்கியது. இக்கல்விக்

கூடத்தில் முதன் முதலாக ஆண்களும் பெண்களும் இணைந்து கல்வி நீரோடையில் குளித்துக் களிகூர்ந்தனர். இதில் பேதமின்றி எல்லோரும் – எல்லா வகுப்பினரும் இனிது பயின்றனர். இக் கூடத்தின் வாசல் கதவுகள் அடிமைகளுக்கும் விபசாரிகளுக்கும் கூட அன்புடன் வரவேற்பளித்தன. வாழ்வில் எளிமையே அக் கல்விக் கூடத்தில் இருந்தது. அங்கு ஆடம்பரம் இல்லை– அமைதியே நிலவியது. ஆரவாரம் இல்லை - ஆனந்தமே இருந்தது. ஆணவம் இல்லை – ஒருமைப்பாடே காணப்பட்டது. எபிக்யூரஸ் முந்நூறுக்கு மேல் நூல்கள் ஆக்கினர் என ஆய்வாளர்கள் கூறுகின்றனர். சில நூல்களே தற்போது அகப்படுகின்றன.

எபிக்யூரஸின் போதனைகள் :

எபிக்யூரஸுக்கு இன்பகரமான வாழ்வே (The happy life) தத்துவத்தின் நற்சாருக விளங்கியது. உணர்ச்சி வேகம் அற்ற நிலை (Passionlessness) அசைவின்மை (Imperturbability) சாந்தி (Tranquility) ஆரோக்கியமான உள்ளம் (Healthy mind) ஆகியவை வாழ்வில் அவசியமான பண்புகள். பிற்காலத்தில் லுக்ரீடியஸ் (Lucretius) என்ற கவிவாணர் தம் கவிதைகளில் எபிக்யூரஸின் தத்துவபோதனைகளைப் படம் பிடித்துக் காட்டுகிருர். அவர்தம் நூலாகிய ''பொருள்களின் இயல்பு பற்றி'' (On the Nature of things–De Rerum Natura (gr)) என்ற நூலில் எழில்பட இயம்புகிருர்.

லுக்ரீடியஸ் (Lucretius), எபிக்யூரிஸ் தத்துவ ஞானியருள் ஒருவர் இவர் ரோமாபுரியில் எபிக்யூரஸ் காலத்திற்கு 250 ஆண்டு கட்குப் பின் வாழ்ந்தவர். பொருள்களின் இயல்புபற்றிய இவரது கவிதைகள் இலக்கிய வரலாற்றிலே அபூர்வமான படைப்பு ஆகும். இது நாத்திக இலக்கியம் என்ற போதும் இதில் நல்ல பல கருத்துக்களைக் காணலாம். இவர்தம் நூலில் அக்கால தெய்வங் களின் மனிதப் பண்பை வன்மையாகச் சாடுகிருர். மனிதப் பண்பின் தெய்விகத் தன்மையை வானுற வாழ்த்திப் பாடுகிருர். இவரது நூல் உலகின்கண் தோன்றிய பைபிளில் ஒன்ருகும் என இவர் தம் பக்தர்கள் போற்றுகின்றனர் - 'நாத்திகளின் நன்னூல்' என வியக்கப்படுகிறது அந்நூல்.

எபிக்யூரஸ் மூன்று விஞக்களைத் தொடுத்துத் தாமே விடையும் காண்கிருர். நாம் யார்? (Why we are), நாம் ஏன் உள்ளோம் (Why we are) மற்றும் நாம் என்ன? (What we are) நாம் கருணை மிக்க கடவுளின் மக்கள் அல்ல - நாம் பொறுப்பற்ற இயற்கையின் மாற்ருந்தாய்ப் பிள்ளைகள் (The step-children of an indiffefrent Nature) வாழ்க்கை என்பது ஒரு தெய்விகக் கலைஞனல் அமைக்கப்

பட்ட திட்டம் அன்று-இயந்திர இயக்கம் கொண்ட பிரபஞ்சத்திலே ஒரு விபத்தே (Accident) வாழ்க்கையாக அமைகிறது. இவ்வாழ்வை இன்பகரமாக ஆக்குவதெப்படி? மனித இனத்திற்கு உண்டாகும் தெய்வ பயத்தையும், மரணபயத்தையும் விரட்டுவதன் மூலம் இவ்வாழ்வை இன்பமயமாக்கிக் கொள்ளலாம். இப்பிரபஞ்சம் ஒரு கைத்திறம் வாய்ந்த கடவுளின் சிருட்டி அல்ல. வானவெளியிலே அணுக்களின் இயக்கத்தாலே விளைந்தது இப்புவனம். அணுக்கள் அநாதியானவை - அவைகள் பிறப்பு அற்றவை - இறப்பற்றவை - அழிவுக்கு அப்பாற்பட்டவை.

ஆத்மாவும் கூட யாக்கையைப் போன்று அழியக் கூடியதே. அதுவும் கூட அணுக்கூட்டத்தின் திரளே. ஆத்மா திரவவடிவான அணுத்திரள் - ஒரு பாத்திரத்தில் நீர் நிரம்பி நிற்பதுபோல, யாக்கையில் ஆத்மதிரவ அணுக்கூட்டம் அடைந்து நிற்கிறது. உடல் இருக்கும் வரை ஆத்மா இருக்கிறது. உடல் அழியுமாயின் ஆன்மாவும்விலகி அதன் வகைப்பட்ட அணுக்கூட்டத்தை அடைந்து வாழ்கிறது என்கிறார் எபிக்யூரஸ் (So long as the body lasts, the soul is held together. But when the body breaks, the biquid soul spills out and is dissolved into the isolatad drops of its individual atoms.)

புதுயுக விஞ்ஞானிகள் எபிக்யூரஸ் கூறும் தத்துவத்தை ஏற்க மறுக்கின்றனர். இவர் சித்துப்பொருளையும் அசித்துப் பொருளையும் வித்தியாசப்படுத்தி விளக்கத் தவறிவிட்டார். சேதனமானது ஆன்மா (Spirit) அசேதனமானது காணப்படும் புவனம் (Maltar) இவ்விரண்டும வேறுபட்டவை என்பது உலகெங்குப் வாழும் தத்துவ மேதைகள்தம் கருத்து. மேலும் பலதுறைகளிலே எபிக்யூரஸ் பகுத்தறிந்து கூறியுள்ளார். அவையாவும் இங்கு ஆயப்படல் சாத்தியம் அன்று. எனவே இத்தோடு விடுக்கிறோம்.

அடுத்த கட்டுரையில் ஆட்சியில் இருந்தவாறே ஆன்ம ஞான போதனைகள் படைத்த புகழ்பெற்ற ரோமாபுரி சக்கரவர்த்தியாக மார்க்கஸ் அரேலியஸின் (Marcus Aurelius) தத்துவஞானம் பற்றி விரிவாகக் காண்போம்.

ஆதார நூல்கள் :

Basic Teachings of Great Philosophers by S. E. Frost
Living Biographies of Great Philosophersby Thomos & Thomos
Philosophy Made Simple by Richard H. Popkin and Avrom [Strole
Get to know Philosophy by Hugh Harris.
Student's History of Philosophy by Arthur Kenyon Rogers.
A History of Philosophy by Frank Thilly.

(தொடரும்)

மணிக்கடலில் முகந்த சில முத்துக்கள்

வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ., எம். லிட்.,
தருமபுரம்.

(மலர் 48, இதழ் 7, பக்கம் 368 இன் தொடர்ச்சி.)

மங்கையரை ஈன்ற மாடங்கள் :

வேடர்களை வெருட்டி விரட்டிய சீவகன் தேரேறித் திரும்பும் போது மகளிரெல்லாம் மாடங்களில் நெருங்கி நின்று அவனைப் பார்த்தனர். மாடங்களே மகளிரைப் பெற்றன - என்று அக் காட்சியை வருணிப்பார் தேவர்.

படவர வல்குலாரைப் பயந்தன மாடமெல்லாம் (சிந். 462)

கேகயன் மகள் அழைத்தபோது இராமன் தேரேறி வர, தெருவில் இடம் இல்லையாகச் சாளரங்களிலும் மங்கையர் நிறைந்து - இராமனைக் கண்டு மகிழ்ந்த காட்சியில் - கம்பர் இதே அமைப்பில்

சாளரத்திலும் பூத்தன தாமரை மலர்கள் (கம். 1866)

என்றார். மிதிலையை நோக்கிவரும் இராமலக்குவர்களை நங்கையர் பலரும் தம்மை நோக்குவதைக் கண்டனர். அப்போது களங்கம் அகற்றிய நிலாக்கள் நீலச்சுருளையும் செங்கிடையும் கொண்டு விளங்கின என்பதாக வருணிக்கப்பட்டன.

சாளரம் தோறும் தோன்றும் சந்திர உதயம் கண்டார்.

(கம். 499)

பாற்கடலும் பஞ்சணையும் :

படுக்கையின் மேல்விரிப்பு வெண்மையாக இருத்தல் அவசியம். தூய்மையான எண்ணங்களுக்குச் சுற்றுச் சூழலும் உதவும் என்ற உளவியல் கொள்கைக்கும் இது ஏற்றதே. வெண்மையான பஞ்சணை பாற்கடலை நினைவூட்ட - சிந்தாமணி

பால் பரந்தன்ன பட்டார் பூவணை (சிந். 541)

என்று பேசும்.

கம்பர் - கைகேயி படுத்திருக்கும் கோலம் காட்டும்போது

மாற்றடல் படுதிரை பவளவல்லியே போற்கிடந்தாள்

(கம். 1446)

என்பர்.

உரிமைதரும் உறவு :

கேண்மை, நட்பு என்ற இருசொற்களை நாம் அறிவோம். மிக நுட்பமான வேறுபாடு இவற்றுக்கிடையில் உள்ளது. உரிமை மட்டும் உடையது நட்பு. உரிமை உறவையும் பிணித்து நிற்குமானால் அந்நிலை கேண்மை என்பதாகும்.

வித்யாதர வேந்தன் கலுழவேகன் தன் மகளை சீதத்தன் என்ற வணிகனிடம் ஒப்புவிக்கிறான். நிலவுலகில்தான் அவள் திருமணம் நடக்கும் என்று கணிவன் சொன்னதால் தான்மூலம் சீதத்தனைத் தன்னாட்டிற்கு அழைத்து வந்தான். அவனுடைய தாய், தந்தை, தாரம், காதல் மக்கள் நலம் வினவியபின்,

இன்றைய நன்று கேண்மை யெமர்நும ரெமூவர்காறும்
நின்றது கிழமை..........
அரசன்யான் வணிகன் நீயே
என்றிரண்டில்லை கண்டாய்இதுநின தில்லம் என்றான் (சிந்.544)

நட்பைப் பின்னும் நெருக்கும் வகையில் - சீதத்தனின் கைபற்றித் தன்னுரிமையைக் காட்டினான்.

பெருந்தகைக் குரிசில்தோழன் பெருவிலைக் கடக முன்கை
திருந்துபு வணங்கப் பற்றிச் சென்றுதன்னுரிமை காட்ட
(சிந். 545)

அத்துடன் நில்லாமல் தன் மகளை அவன் மகளென்றே கூறி அவன்பால் அடைக்கலம் புகுவிக்கின்றான்.

நின்மகளிவளை நீயே நின்பதிக் கொண்டுபோகி
இன்னிசை பொருது வெல்வான் - யாவனானாலும் அவனுக்கு

இவளை உரிமையாக்கிடுக என்று கூறினான். (சிந். 552)

நட்பின் நெருக்கம் நினது இல்லம் - நின்மகள் என்று கூறியதிலும்-தன் மனைவிமார்களை அறிமுகம் செய்து வைத்ததிலும்-தெளிவாகத் தெரிகிறது.

கம்பர் மிக உயர்ந்த இப்பண்பாட்டைத் தன் காவியத்தில் அமைத்து ஏற்றம்பெறச்செய்கிறார். நண்பனைத் தன் இளவல் என்று கூறிக் கொள்ளும் காவலன்மார்கள் பின் மனைவியை அறிமுகம் செய்துவைக்கும் போது மட்டும் உன்தம்பி அல்லது அண்ணன்

என்று கூறி - அவனை நம்பாத - தங்கள் பலவீனத்தை வெளிப் படுத்துவார்கள். இராமன் இத்தகைய தவறைச் செய்யவில்லை. குகனிடம்,

என்னுயிர் அனையாய் நீ இளவல் உன் இளையான்இந்
நன்னுதலவள் நின்கேள் (கம். 1994)

என்று கூறி இனிநாமோர் ஐவர்கள் உளராளேம் - என்று பின்னும் அதனை உறுதிப்படுத்தினன்.

இதனைச் சீதை அசோகவனத்தில் எண்ணிப் பார்த்து நெடுமூச் செறிகிறாள்.

ஆழநீர்க் கங்கை அம்பி கடாவிய
ஏழை வேடனுக்கு எம்பி நின் தம்பி நீ
தோழன் மங்கை கொழுந்தி எனச்சொன்ன
வாழி நண்பினை உன்னி மயங்குவாள் (கம். 5091)

இவ்வரிய நட்பின் திறம் யாரிடமும் எளிதில் தோன்றாது என்பதால் மீட்டும் சீதை வாயாலும் அதனைக் கூறி மகிழ்கிறார் கம்பர்.

இசை உணரும் பறவை :

பறவைகளில் இசையுணர் திறன் கின்னரம் என்பதற்கு உண்டு சிந்தாமணி கீதத்தால் மயங்கிய இப்பறவையை

கீதத்தான் மீண்டன கேள்விக் கின்னரம் (சிந். 660)

என்று காட்டும். கம்பர் அப்படியே அதனை ஏற்றுப் பேசுவார்.

கின்னரம் பயில் கீதங்கள் (கம். 871)

பாடுகின்றன கின்னர மிதுனங்கள் (கம். 2057)

நிலாவும் அராவும் :

கிரகணம் என்பதற்குப் பிடித்தல் என்பது பொருள். திங்களைப் பாம்பு கொண்டற்று என்ற உவமை திருக்குறளில் வருகிறது. பாம்பால் விழுங்கப்பட்ட நிலவு ஒளி குன்றி இருக்கும். அதற்கு முன்பும் பின்பும் ஒளிமிக்கு இருக்கும்.

சிந்தாமணியில் சந்தர்ப்பத்தையிடம் யாழ்ப்போரில் தோற்ற அரசர் குழாம் எல்லாம் ஒளி குன்றி நின்ற காட்சி.

மறுமயத் இவர்ந்த வேக மாசுண மடையப்பட்ட
நிறைமதி போன்று மன்ன ரொளி குறைந்து - உருகினர்

(சிந். 665)

எனவரும். கம்பர்-பாம்பு விழுங்குமுன் ஒளியிக்கிருக்கும் நிலவைக் கைகேயிக்கு இணையாகக் காட்டினர்.

பட்டாபிஷேகச் செய்திகேட்டு - அதனை மாற்றும் வேகத்தோடு வரும் கூனி பாம்பாளுள். அது தீண்டவருந் துணையும் தூக்கத்தில் ஆழ்ந்திருந்த கைகேயி முகம் முழுநிலவாக ஒளியுமிழ்ந்தது என்றார் கம்பர்

அணங்குவாவி விடவார் அணுகுமெல்லையும்
குணங்கெடாது ஒளிவிரி குளிர் வெண்திங்கள் போல

(கம். 1451) சிந்தாமணி - கம்பர் வாக்கில் ஒளி அதிகம் பெற்றது உண்மை என்பதை உணருகிறோம்.

(வளரும்)

<u>கடிதம்</u>

P. அருள் நமச்சிவாயன், தஞ்சாவூர்
வழக்குரைஞர். 9—7—1989.

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்களின் பொன்னார் திருவடிகட்கு வணக்கம் பல. குருபூசைப் பெருநாளில் குருமகாசந்நிதானம் வழங்கியருளிய ஆசிச் செய்தி கண்ணுறும் பேறுபெற்றேன். 'உவமையிலாக் கலைஞானத்தையும் உணர்வரிய மெய்ஞ்ஞானத்தை'யும் விளக்கியருளிய பாங்கும், காட்டாக 'வித்தகப்பாடல் முத்திரத்தடியரும்' சந்தானகுரவர்களும் ஒரோவழி கலைஞானமும் மெய்ஞ்ஞானமும் ஒருசேரப் பெற்றருளிய குறிப்பும், தனித்தனியே பெற்றவரும் அதனைத் தெய்வச்சேக்கிழார் பெருமான் பாடியருளிய சிறப்பும், கமலைக்கும் தருமைக்கும் உள்ள தொடர்பினை, ஆதிகுருமுதல்வர் ஸ்ரீ குமாரகுருபர சுவாமிகள் வரலாறுகளோடு ஒப்பிட்டுக் காட்டிய திறமும் கருதி மகிழ்தற்குரியது. திருவருளுக்கு நன்றி பாராட்டி இந்தச் செய்தியை விரும்பிப் படிக்க 'என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே' என்று நான் அடியேனைப் பாராட்டிக்கொண்டு இதனைப்போன்ற அரிய பல செய்திகளை வழங்கியருளவேண்டும் என்று பொன்னார் திருவடிகளை வணங்கி விண்ணப்பித்துக் கொள்கிறேன்.

புகழ்ச்சோழர், நரசிங்கமுனையரையர்

வித்துவான் திரு. கா. ம. கண்ணப்பன் எம்.ஏ.,பி.லிட்.,

[தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தில் 4—6—1989 ஆங்கிலமாத முதல் ஞாயிறன்று வழங்கிய அருளுபதேசத்தையொட்டி எழுதப்பெற்ற கட்டுரை.]

வேத ஒலியும், விழாவொலியும், திருமுறைப் பண்ணொலியும் திருக்கோயில் மணிஒலியும் நிறைந்து விளங்குவது தருமை. உலகிற்கு நலஞ்சேர்க்கும் உன்னத அருளாளர்கள் இங்கே குருமூர்த்தம் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ளார்கள்! ஞானிகளின் அருட்கதிர் ஒளி அங்கே கண்ணுக்குப் புலப்படாமல் எங்கும் பரவி நிற்கிறது. புண்ணியத் தவமுனிவர்கள் வாழ் அந்தப் புனிதபூமியில் வாழ்வதும் வருவதும் தரிசிப்பதும் எத்தனை, எத்தனைப் புண்ணியம்! - அடியேன் இப்படிச் சிந்தித்தவாறே திருமடம் சேர்ந்தேன். மணி 10.

தருமைக் குருமணிகள் சொக்கநாதர் பூசை நிறைவித்துப் பாராயணமும் ஆகிச் சித்திராசனத்தில் அமர்ந்தார்கள். அன்பர்கள் திருவருட்பொலிவு மிக்க குருமணிகளின் திருவடி தொழுது திருநீறு பெற்று, இம்மைப் பெரும்பயனைக் கருதி அணிந்து, பணிவுடன் அமர்ந்தனர். திருமுறைப் பண்ணிசை, நாமாவளியை அடுத்துக் குருமணிகள் அருளுபதேசம் தொடங்கினார்கள். முதலில் மாதச் சிறப்பு அருளிப் புராணத்தின் வாயிலாகத் தத்துவ நெறி காட்டினார்கள்.

புகழ்ச்சோழர், நரசிங்கமுனையரையர் என்னும் நாயன்மார்களின் வரலாற்றை உபதேசித்து அவர்களின் வாழ்வுநெறி வாயிலாக நாம் உணர்ந்து பின்பற்றத் தக்கன இவை எனச் சுட்டியருளினார்கள்.

புகழ்ச்சோழர் உறையூரைத் தலைநகராகக் கொண்டு அரசாண்டவர். தோள் வலிமை மிக்கவர். பகையரசர் ஏவல்கேட்க, ஒருகுடைக்கீழ் அரசு செலுத்தியவர். திருக்கோயில்களில் பூசைகள் சிறப்பாக விளங்கச்செய்தவர். வைதிகசைவநெறி ஓங்கச்செய்தவர். சிவனடியார்களை உபசரித்தவர். அடியார்கள் வேண்டுவனவற்றைக் குறிப்பறிந்து அளித்தவர். திருநீற்று அன்பு பாதுகாத்தவர்.

இங்ஙனம் புகழ்ச்சோழர் உறையூரில் நன்னெறி தழைக்க அரசு இயற்றினார். ஒருபோது, தம் குலமரபுக்கு உரிமையுடைய பெருநகராம் கருவூர் செல்லப் புறப்பட்டார். சென்று, குடமலை மன்னர் முதலானோர் திறைகொணர்ந்து செலுத்த வாதியாகக்

கருவூர்சென்றார். கருவூர், சோழர்கள் முடிசூட்டிக் கொள்ளும் ஐந்து இடங்களும் ஒன்று. உறையூர், திருவாரூர், பூம்புகார், சேய்ஞலூர் என்பன மற்ற இடங்கள் என்ற குறிப்பையும் குருமணிகள், இடையே அருளினார்கள். புகழ்ச்சோழர் கருவூர் சென்றடைந்தவுடன் நேரே தம் திருமாளிகையை அடைந்தார் அல்லர். முதலில் சிவபெருமான் எழுந்தருளிய திருக்கோயிலினை அடைந்தார். வழிபட்டார்; பின்னர்த் திருமாளிகை அடைந்தார்.

அந்நாளில் திறைப் பொருள்களைக் கொணர்ந்து, அளித்து மாற்றுப் புலத்தரசர்கள் பணிந்துநின்றனர். யானைகள், குதிரைகள், இரத்தினங்கள், பொற்குவியல்கள் ஆகியனவற்றைக் காட்டப் புகழ்ச்சோழர் கண்டு மகிழ்ந்தார். திறை செலுத்தியோர், அரசுரிமைத் தொழில் செய்யப் பணிந்தான்.

இங்ஙனம் கருவூரில் அரசாட்சி புரிந்து வருங்கால் சிவகாமி யாண்டார் என்னும் சிவனடியார் கொணர்ந்த திருப்பள்ளித்தாமம் நிறைந்த பூக்குடலையை அவர் கையிலிருந்து பட்டத்துயானை பறித்துச் சிதறச் செய்தது. அவ்வூரில் வாழ்ந்த எறிபத்தர் என்பார் சிவாபராதம் நிகழும் இடங்களில் தாமே சென்று மழுவினால் எறிந்து தண்டிக்கும் பத்திமையுடையவர். அவர் பூக்குடலை சிதறியநிலை கண்டார். காரணமான யானையையும் அதனை அடக்காத பாகர், குத்துக்கோல்காரர் ஐவரையும் கொன்றார். இஃது அறிந்த புகழ்ச் சோழர் வெகுண்டு, அவ்விடம் சென்றார்; புகழ்ச்சோழர் உண்மை உணர்ந்தார். 'யானைசெய்த இக்குற்றத்திற்கு இது போதாது; என்னையும் கொன்றருளும்' என்று தம் வாளினை எறிபத்தரிடம் தந்து தம்மையும் தண்டித்தருளும் எனத் திருத்தொண்டின் நெறியில் நின்றார்.

இவ்வரலாற்றை எறிபத்தநாயனார் புராணத்தில் சேக்கிழார் முன்னரே அருளிச் செய்தார் எனினும் கூறியதையே திரும்பக் கூறாமல் மிகவும் சுருக்கமாகத் தேவையான அளவு கூறியிருக்கும் திறத்தைப் புலப்படுத்தியருளினார்கள். மேலும், புகழ்ச்சோழர் இக் குற்றத்திற்குக் காரணம் தாமே எனத் துணிந்து தம்மைக் கொன்றருளுமாறு வேண்டியதிறம் பற்றிக் குறிப்பிட்டு, ஓர் அரசன் காக்கும் நாட்டில் ஒரு கெடுதல் நடந்தால் நாட்டுத் தலைவன் அதனைத் தன் குற்றமாகக் கருதினன் - என அரசநீதியை எடுத்து விளக்கியமை சீரிய அறநெறிக் கோட்பாட்டு ஆய்வாக அமைந்தது.

இங்ஙனம் புகழ்ச்சோழர் கருவூரில்இருக்குங்காலத்தில் ஒருநாள் அமைச்சர்கள் 'திறை கொடாத மன்னன் ஒருவன் இருத்தலை அரசனுக்குத் தெரிவித்தனர். அவன் 'அதிகன்' என்னும் நாடுர்க் குறுநில மன்னன் என்பதையும் விண்ணப்பித்தனர். குருமணிகள்,

அதிகமான் பற்றிய சிலகுறிப்புக்களை அருளினார்கள். "அதிகன், அதிகமான் நெடுமானஞ்சி என்று சங்க இலக்கியங்களில் காணப்படும் அரச மரபினன், சங்க இலக்கியங்களில் காணப்படும் அதிகன், ஔவையார், பரணர் முதலியோரால் பாடப்பட்டவன். கடையெழுவள்ளல்களுள் ஒருவன். அதிகன் மரபினர் தகடூரைத் (தர்மபுரி) தலைநகராகக் கொண்டு ஆண்ட குறுநிலமன்னர். கொல்லிமலை, குதிரைமலை (உடுமலைப்பேட்டை வட்டத்தில் உள்ளவை) என்னும் இவற்றை மலையரண்களாகக் கொண்டு ஆண்டவர்கள் - என்ற வரலாற்றுக் குறிப்புக்களை அருளித் தெளிவு படுத்தினார்கள். வரலாற்றைத் தொடர்ந்தார்கள்.

புகழ்ச்சோழர் அமைச்சர்களை விளித்து, 'மலையரண்களை அழித்து அதிகனுடன் போர் புரிக' என ஆணை தந்தார். புகழ்ச்சோழர் படைகள் தகடூரை எய்திச் சமர் புரிந்தன. சோழர் படைக்கு ஆற்றாத அதிகன் காட்டில் சென்று ஒளிந்தான். சோழர்படை பல் நிதிக்குவை, யானை மற்றும் குதிரைகள் முதலியன கொண்டு வெற்றிவாகை சூடிக் கருவூர்ப்பதி அடைந்தன. போர்க் களத்துத் தாம் வீழ்த்திய வீரர்கள் சிலரது தலைகளையும் கொணர்ந்தனர். கருவூர்த் திருநகர வாயிலின் முன்னே கொண்டு வரப்பெற்ற அத் தலைகளைப் பணியாளர் காட்டக்கண்டார். அவற்றுள் சிறுசடையோடு கூடிய தலை ஒன்றை புகழ்ச்சோழர் கண்டார். உடல் நடுங்கினார்; பதைத்தார். கைகூப்பித் தொழுதார். அருகே சென்று நன்கு தெரியப் பார்த்தார். "திருநீற்று நெறி புரந்து யான் அரசளித்தபடி சால அழகிது" என்றும்,

"சீர்தாங்கும் இவர்வேணிச் சிரந்தாங்கி வரக்கண்டும்
பார்தாங்க இருந்தேனோ பழிதாங்குவேன்"

என்றும் மனம் பதைப்புற்று மொழிந்தார். சிவபெருமானுக்கு வழித் தொண்டு செய்யும் பொருட்டும் நாட்டினைக் காத்து அரசுபுரிதற்கும் என் மகனுக்கு முடி சூட்டுக" எனக் கட்டளையிட்டார். செந்தீமூட்டி வளர்ப்பித்தார். சிவபராதம் தீரத் தாமே வழிகண்டார். திருநீறு புனைந்த திருக்கோலம் தாங்கினார். தாம்கண்ட சடைத்தலையை ஒருபொன் தட்டிலே ஏந்தினார். அத்தட்டினைத் தம் திருமுடிமேல் தாங்கினார். கொழுந்து விட்டெரியும் செந்தீயை வலம் வந்தார். திருவைந்தெழுத்தை எடுத்து ஓதினார். மகிழ்ச்சியுடன் தீயிடைப் புகுந்தார்.

தீயினில் புகுந்த புகழ்ச்சோழர், கற்பக மலர் நிலவுலகம் முழுதும் சொரிய, மங்கலவாத்தியங்கள் ஒலிக்க, சிவபிரான் திருவடி நீழல் சேர்ந்தார். இது வரலாறு. "பொழில் கருவூர்த் துஞ்சிய புகழ்ச்சோழர்" என்று சுந்தரர் திருத்தொண்டத் தொகையில் இவரைக் குறிப்பிடுகின்றார். 'துஞ்சிய' என்ற சொல் தூங்கிய

என்னும் பொருளை இவ்விடத்தில் தராது. இறந்த, முத்திப்பேறு எய்திய என்னும் பொருளை உணர்த்தும் எனக் குறிப்பிட்டு, சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவன் என்பது போன்ற சங்க இலக்கியப் பெயராட்சியைக் குறிப்பிட்டு விளக்கியருளியமை மனம் கொள அமைந்து மகிழ்வித்தது இங்ஙனம் சீரிய சிந்தனைகளை வழங்கியருளிய குருமணிகள் நரசிங்கமுனையரையர் வரலாற்றையும் தொடர்ந்து உபதேசித்தார்கள்.

நரசிங்கமுனையரையர் திருநாவலூரினை ஆண்ட குறுநில மன்னர். முனையதரையர் என்ற சொல் முனையரையர் என ஆயிற்று. இவர் சுந்தரமூர்த்தி சுவாமிகளை அபிமான புத்திரராக எடுத்து வளர்த்த சிறப்பினை உடையவர். திருவாதிரைத் திருநாள்தோறும் சிவபெருமானுக்கு நியமமாக விசேட பூசை செய்தவர். அன்று தம்மை வந்தடைந்த தொண்டர்கட்கு 100 பொன்னுக்குக் குறையாமல் வழங்கித் திருவமுது செய்வித்து வழிபட்ட திருத்தொண்டின் நெறி நின்றவர்.

இங்ஙனம் தொண்டு செய்துவரும் நாளில் - ஆதிரைநாளில் - பொன்னை வழங்கும்போது காமநோயின் அறிகுறிகள் தெரியும் மேனியுடன் ஒருவர் திருநீறு அணிந்துகொண்டு அங்கே வந்தார். அருகிலிருந்தோர் அவரைக் கண்டு அருவருப்பு எய்தி ஒதுங்கினர். நரசிங்கமுனையரையர் இதனைக் கண்டார். அவ்வடியார் எதிரே சென்றார். கைகூப்பிவணங்கினார். "நல்லொழுக்கம் இல்லாதவர்களே என்றாலும் திருநீற்றினை அணிந்த அடியார்களை உலகத்தார் இகழ்தல் ஆகாது. அங்ஙனம் இகழ்ந்தோர் நரகினை அடைந்து துன்புறுவர்." ஆதலால் அருவருத்து ஒதுக்குதலைத் தவிர்க்கும் பொருட்டுக் காமநோய்க் குறிகள் தெரிய வந்திருந்த அடியார்க்கு 200 பொன் கொடுத்து, தொழுது இனிய மொழி சொல்லி விடை கொடுத்து அனுப்பினார். இங்ஙனம் பலகாலும் தொண்டாற்றி முத்திப்பேறு எய்தினார் - இதுவரலாறு. நரசிங்கன் என்ற சொல் வைணவத் தொடர்புடையது. ஆயினும் இவ்வடியார் சிவபெருமானிடத்தும் அடியார்களிடத்தும் பேரன்பு கொண்டு தொண்டு புரிந்தார் என விளக்கியருளினார்கள். முனையரையர் என்பது போர் முனையில் வெற்றி கொண்ட குறுநிலமன்னர் எனப் பொருள் விளக்கம் தந்தருளினார்கள். மனித இயல்பு தவறுடையது தான் என்றாலும் இறைத் தொண்டில் குறையக்கூடாது என இவ்வரலாறு கொண்டு தத்துவ நெறி காட்டியருளியமை மனங்கொள அமைந்தது.

இங்ஙனம் தத்துவக்கோட்பாடுகள், சொற்பொருள் விளக்கம், திருமுறை, சாத்திர ஒப்பீடுகளுடன் அருளுபதேசம் நிறைந்தது. இன்கனிச் சாறு தாகம் தணித்தது. புதிய சிந்தனைகளை ஏந்தி இல்லம் ஏகினோம்.

நாயன்மார் நெறியருளி நமையெல்லாம் வழிநடத்தும்
தூயதவ வேந்தருள் துணையடிகள் தொழுதிடுவோம்!

வாழ்க குருமணிகள்!

ஸ்ரீ கல்யாணசுந்தரமூர்த்தி

வித்துவான் திரு. வி. சா. குருசாமி தேசிகர் எம். ஏ.,

தியான சுலோகம்

ஸிந்தூராபம் த்ரிணேத்ரம் யுகபுஜஸஹிதம் ஹாரகேயூர பூஷம்
திவ்யைர் வஸ்த்ரைர் வ்ருதாங்கம் வரஸமுசிதலஸத் வேஷயுக்தம்
[சுபாங்கம்
வந்தே கல்யாணமூர்த்திம் கரதலகமலே தேவிஹஸ்தம் ததாநம்
ஹஸ்தே டங்கம் ம்ருகஞ்ச தததமதவரம் பத்தகங்கேந்துசூடம்.

பொழிப்புரை ; சிவந்த காந்தி உள்ளவரும், முக்கண்ணரும், நான்கு கைகளோடு கூடியவரும், மாலை தோள்வளை முதலிய ஆபரணங்களைப் பூண்டவரும், உயர்ந்த வஸ்திரங்கள் உடுத்தியவரும், கல்யாண கோலம் பூண்டவரும் திலவுலாவிய நீர்மலி வேணியை உடையவரும், வரதம், பரசு, மான், இவைகளைத்தரித்தவரும், வலது கையால் உலகமாதாவான பார்வதி அம்மையாரின் வலக்கையைப் பிடித்துத் திருமணம் செய்து கொண்டவருமான ஸ்ரீ கல்யாணசுந்தரப் பெருமானை வணங்குகின்றேன்.

விளக்கம் : உமையம்மை இமவான் மகளாகப் பார்வதி என்னும்திருப்பெயரோடு தோன்றி வளர்ந்தாள். உரியவயதடையும் போது சிவபெருமானை மணம்புரிந்து கொள்ளுதற்குக் கடுந்தவம் மேற்கொண்டாள். பெருமான் கிழவேதியர் வடிவம் கொண்டு அம்மையிடம் சென்று திருவிளையாடல் புரிந்து முடிவில் விடைமீது காட்சிதந்து அவரை மணம்புரிந்து கொள்ளுவதற்கு உடன்பட்டு அருள்புரிந்தார். முறைப்படி முனிவர்களை இமவானிடம் அனுப்பி மணம் பேசிவரச் செய்து ஒர் பங்குனி உத்திர நாளில் தேவர்கள் முனிவர்கள் அனைவரும் புடைசூழ எழுந்தருளி இமவான், மேனை இருவரும் தம் மகளைக் கைப்பிடித்துத்தரத் திருமாங்கல்யம் அணிவித்துத் திருமணம் புரிந்து கொண்டருளினார். சிவபெருமான் பார்வதி தேவியை மணம் செய்து கொண்டருளிய திருக்கோலத்தில் எழுந்தருளிய நிலையில் கல்யாணசுந்தரர் என வழங்கப்பெற்றார். இறைவன் உயிர்கட்குப்போக மோட்சங்களைத்தந்தருளக் கொண்ட கோலம் இதுவாகும்.

செய்திகள்

ஆயில்யத் திருநாள் ஆலய வழிபாடு

தருமை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தின் ஜன்ம நட்சத்திரமாகிய ஆயில்யத் திருநாளில் தேவார வைப்புத் தலச் சிறப்பு வழிபாடுகள் நிகழ்ந்து வருகின்றன. சுக்கில-ஆனி-ஆயில்ய நாள் வழிபாடு 6—7—89 அன்று கும்பகோணம் ஸ்ரீ சோமநாத சுவாமி திருக்கோயிலும் கருப்பூர் ஸ்ரீ அகத்தீசுவரம் உடையார் திருக்கோயிலிலும் சிறப்பாக நடைபெற்றது. வைப்புத் தலங்களாக விளங்கும் இவற்றின் சிறப்பை விளக்கித் தருமை ஆதீனப் புலவர் வித்துவான் திரு.வி.சா. குருசாமிதேசிகர், எம்.ஏ., உரையாற்றினர். பேராவூர், இடைக்குளம், சோமேச்சுரம், கருப்பூர், ஏமநல்லூர்த் தேவாரங்களும் தலச்சிறப்புக்களும் என்ற நூல் வெளியிடப்பெற்றது. அன்பர்கள் வழிபட்டுப் பயன்பெற்றனர்.

குருவருளும் அருளுபதேசமும்

தருமை ஆதீனத் திருமடத்தில் ஆங்கிலமாத முதல் ஞாயிற்றுக் கிழமை தோறும் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானத்தை அன்பர்கள் வழிபட்டு அருளுபதேசம் பெறும் பிரார்த்தனைக் கூட்டம் நிகழ்ந்து வருகின்றது. இம்மாதம் 96 ஆவது அருளுபதேசம் 2—7—89 அன்று திருமுறைப் பாராயணத்துடன் தொடங்கி நடைபெற்றது.

திருத்தொண்டர் புராண உபதேசமாக அதிபத்த நாயனார் புராணத்தைத் தத்துவச் செறிவு தோன்ற உபதேசித்தார்கள். "அதிபத்தர் புராணம், சிறந்த பொருளை இறைவனுக்கு ஆக்குதல்" என்ற உயரிய நோக்கைத் தெளிவு படுத்துவது. நல்லபொருள்களை, உயர்ந்த பொருள்களை இறைவனுக்கு என ஆக்கும் பண்பு மக்களிடையே - குறிப்பாக பக்தர்களிடையே மலரவேண்டும் எனப் புராணத்தின் வாயிலாகச் சீரிய வாழ்வு நெறி புலப்படுத்தி உய்யக் கொண்டருளினார்கள்.

தருமை ஆதீன அடியார்கள், அலுவலர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர். அடுத்து 97 ஆவது அருளுபதேசம் 6—8—89 அன்று நடைபெறும் அன்பர்கள் பயன் பெறுவாராக.

வேளூரில் சம்வத்சராபிஷேகம்

சிவாலயங்களில் திருக்குடமுழுக்கு நடைபெற்ற திருநாளை அடுத்து வரும் அதேநாளில் அபிஷேக ஆராதனைகளுடன் கொண்டாடுவதை சம்வத்சராபிஷேகம் என்பர். தருமை ஆதீனத் திற்குச் சொந்தமான வைத்தீசுவரன் கோயில் என வழங்கும் திருப்புள்ளிருக்கு வேளூர்த் திருக்கோயிலில் சௌமிய - ஆனி - திருவோணநாளில் (2—7—1969) குடமுழுக்கு விழா நடைபெற்றதன் நினைவாக சுக்கில - ஆனி திருவோணநாள் கூடிய 22—6—89 வியாழன் அன்று சம்வத்சராபிஷேகம் சிறப்பாக நடைபெற்றது. வேதபாராயணம், திருமுறைப்பாராயணம், ருத்ரஜபம் ஆகியவற்றுடன் விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. அன்பர்கள் தரிசித்துப் பயன் பெற்றனர்.

ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா

தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரசுவாமி திருக்கோயிலிலும் சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலிலும் சமய குரவருள் ஒருவராகிய ஸ்ரீ மாணிக்கவாசக சுவாமிகள் குருபூஜை விழா சுக்கில - ஆனி - 23 ஆம் நாள் (7—7—89) வெள்ளிக்கிழமை மிகச் சிறப்பாக நடைபெற்றது. சமயாசாரியர், சந்தானாசாரியர்களுக்கு விசேஷ அபிஷேக அலங்கார ஆராதனைகள் நடைபெற்றன. தருமை ஆதீனம் ஸ்ரீ ஞானபுரீசுவரர் கோயிலுக்கு ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானம் அவர்கள் காலை, மாலை, இருவேளைகளிலும் எழுந்தருளி வழிபாடு ஆற்றினார்கள். தருமைத் திருக்கோயிலில் மாலை 6-30 மணியளவில் வித்துவான் திரு. கா. ம கண்ணப்பன், எம். ஏ., பி எட்., திருவாசகம் பற்றியும், புலவர் திரு கே கணபதி, பி. லிட்., பி. எட்., மாணிக்கவாசகர் அருள் வரலாறு பற்றியும் உரை நிகழ்த்தினர். இரவு 9 மணி அளவில் ஸ்ரீ மாணிக்கவாசகர் திருவீதியுலா நடைபெற்றது.

சிதம்பரம் ஸ்ரீ சபாநாயகர் திருக்கோயிலில், சமயாசாரியர் சந்தானாசாரியர் சந்நிதியில் மாலை 7 மணியளவில் சொற்பொழிவு நிகழ்ச்சி நடைபெற்றது. திருமுறைக் கலாநிதி திரு. எம் வன்கசபை ஓதுவார் திருமுறைப்பண்ணிசை நிகழ்த்தினார். சிவஸ்ரீ T. துரைசாமிரத்தின தீக்ஷிதர் தலைமையில் வித்துவான் திருமதி. ப. நீலா, எம். ஏ. எம். ஃபில்., 'கோவை திருவாசகம்' என்னும் பொருளின் உரையாற்றினார் அன்பர்கள் வழிபட்டும் சொற்பொழிவினைக் கேட்டும் பயனடைந்தனர்.

எதிர்காலம்

ஜோதிஷம் திரு. A. இராசமாணிக்கம்

ஓய்வுபெற்ற ஆசிரியர்
ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் நடுநிலைப்பள்ளி, திருப்பனந்தாள்

(சுக்கிலஹு ஆனிமீ 1உ முதல் 31உ முடிய)

(16—7—89 முதல் 16—8—89 முடிய)

சுக்கிலஹு ஆடிமீ 1உ பானுவாரம் மூலநக்ஷத்திரம் கைதுலகரணம் கூடிய காலத்தில் சூரிய உதயம் முதல் 28 நாழிகை 33 விநாடிக்கு தனுர் லக்கினத்தில் ஸ்ரீ உலகரட்சகரான சூரிய பகவான் மிதுனராசியிலிருந்து கடகராசி சங்கிரமணமாக ஆடி மாதப் பிரவேசம் செய்தருளுகின்றார் அன்று தட்சணாயன புண்ணியகாலம். ஸஸ்யாதிபதி சூரியன் ஆகிறார். இதனால் ஸஸ்ய பயிர்களாகிய கோதுமை, கடலை, கொள்ளு ஆகியவை விருத்தியடையும். சங்கிரமணகால கிரகஸ்திதியின் பலனாவது உலகில் எங்கும் பிரஜைகள் ஆக்கத் தொழில்களில் முன்னேற்றமடைந்து உணவு, உடை இருப்பிட வசதிகள் பெற்று க்ஷேமமுறுவர். தேசங்களில் எங்கும் ஆன்றோர்களால் அறநிலையங்களில் தர்மங்கள் தேவாலயதிருப்பணிகள் ஆரச்சக்கரம நிரை நடந்தேறும். எங்கும் புதிய கல்விச்சாலைகள் மாணாக்கர் விடுதிகள் வெகுவாக ஏற்படும். உலகெங்கும் உள்ள திருமடங்கள் ஆசாரியபீடங்களில் மகாமுனிவர்களாக அவதாரமாகி வந்து சிவபரம் பொருளைப் பூசிக்கின்ற பாக்கியத்தில் திகழ்கின்ற சிவஞான குருமகான்கள் ஸ்ரீலஸ்ரீ குருமகாசந்நிதானங்கள் ஜெகத் குருமகான்கள் உலகத்திற்கு அறவுரைகள் மனுநீதி தர்ம நெறிமுறைகள் தம் திருவாய் மலர்ந்து விமர்சித்து அருளுவார்கள். பக்தர்கள் சிஷ்யகோடிகள் இறைநெறி செலுத்தும் நெறியாளர் ஆகியோருக்கு தம திருக்கண் பார்வையினின்றும் முன் பாவம் நீக்கி நிகழ்வு, எதிர்வு கால பாவசிந்தனையின்றி செவ்விய வழியில் பிரகாசிக்க அருளிச் செய்வார்கள். தேசங்களில் எங்கும் தேவாலயங்களில் சிவபெருமானுக்கு அன்னார் திருநோக்கில் ஐதீக நெறி பிறழாது சிறப்பொடு பூசனைகள் நடந்து உலகம் சுபிட்சமுறும்.

1. மேஷம் :- அசுவதி - பரணி - கார்த்திகை ¼

மேஷ ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும் பண வருமானம் வெகுவாக வரும். வித்தியா வியாபாராதி கலைத்

துறையில் விசேஷ நற்பலனை உண்டு பண்ணும். புதிய வாகனம் ஒன்று வாங்குதல் ஆகும். ஜூலை 26 தேதி ஆனால் பூமியில் இயந்திர சாதனங்களில் அபிவிருத்தி ஏற்படும். முயற்சித்திருந்த நல்விஷய காரியத்துக்கு சமூக ஒத்துழைப்பு அல்லது அரசாங்க அனுமதி தரும். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கிய பலன் தரும். ஆகஸ்டு 10, 11, 12 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

2. ரிஷபம் :- கார்த்திகை ¾ - உரோகிணி - மிருகசீரிஷம் ½

ரிஷப ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் வந்து நிறையும். நல்ல இரத்தின பூஷணம் தரும். எழுத்துமூல விஷயங்களில் லேவா தேவிகளில் ஜூலை 29 தேதி ஆனால் நல்லன ஏற்படச் செய்யும். நவீன இயந்திர சாதனம் ஒன்று அனுபோக பிராப்தியாகும். எல்லாக்காரியங்களும் கௌரவ போக்கில சிறப்பாக நடந்து கொண்டிருக்கும். தாரம் புத்திரர் களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஜூலை 17, 18 ஆகஸ்டு 13, 14 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

3. மிதுனம் :- மிருகசீரிஷம் ½ - திருவாதிரை - புனர்பூசம் ¾

மிதுன ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் கணிசமாக வரவாகும். வித்துவத்துவம், கலைத்துறையில் சிறப்புப் பலனைத் தரும். ஓர் பூஷணம் அளிக்கும். வாகன சுகம் திருப்தியளிக்கும். ஜூலை 26 தேதியின் மேல் முயற்சித்திருந்த எல்லாக்காரியங்களிலும் நற்பலனை உண்டு பண்ணும் தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜூலை 19, 20 ஆகஸ்டு 15, 16 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

4. கடகம் :- புனர்பூசம் ¼ - பூசம் - ஆயில்யம்.

கடக ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் வெகுவாக வரும். அதற்கேற்ப பரோபகார நற்செலவும் ஏற்படும். வாகனசுகம் திருப்தியளிக்கும். வெளுமை வஸ்து பிராப்தியளிக்கும். ஜூலை 26 விருந்து எல்லாக்காரியங்களிலும் விரைவு ஏற்படுத்தும். தெய்வ பலனால் எல்லாவற்றிலும் ஜெயபிராப்தியாகும். வித்தியா வியாபாராதி கலைத்துறையில் எழுத்துமூல விஷயங்களில் ஜூலை 29 தேதி முதல் முன்னேற்பாடு, மனைவீடு ஆகியவையும் விருத்தி பலனும் காணும். ஜூலை 21, 22 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

5. சிம்மம் :- மகம் - பூரம் - உத்திரம் ¼

சிம்ம ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் பெருமதிப்பில் வரவாகும். அதற்கேற்ப அவசிய செலவினங்களும் ஆகும். வித்துவத்துவம் கலைத்துறையில் புகழ் மகிமை சம்பவிக்கும். ஜுலை 26 தேதியின்மேல் பூமி இயந்திரம், நவீன வாகனம் இவற்றில் நல்லன ஏற்படும். எல்லாக்காரியங்களையும் கெடியான தோரணையில் நடத்துவதற்கான அனுகூலங்கள் ஏற்படும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்து வரும். ஜுலை 23, 24 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

6. கன்னி :- உத்திரம் ¾ - ஹஸ்தம் - சித்திரை ½

கன்னியா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அரச கண்யத்திற்கு ஏற்ப வந்துகொண்டிருக்கும். டாம்பீகப் போக்கில்ஸ்திரி வழியினர்களுக்கு முக்கியசெலவினங்களை ஏற்றுக் கொள்ளும். பூமியில் நீர் இயந்திரங்களில் முதலீடு ஆகும். வித்தியா வியாபாராதிகளில் கலைத்துறையில் விசேஷ பலன் அளிக்கும். எல்லாக்காரியங்களும் நன்முறையில் நடந்து கொண்டிருக்கும். ஜுலை 25, 26 தேதிகள் சந்திராஷ்டமம். சனி ஞாயிறு சுபம்.

7. துலாம் :- சித்திரை ½ - சுவாதி - விசாகம் ¾

துலா ராசி 9 பாதங்களும் சுபமான பலனைத் தரும். பண வருமானம் அதிகம் தரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரசாங்கத்திலிருந்து நன்மைகள் ஏற்பட்டு வரும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்திபலன் தரும். நல்லவர் பெரியோர்களின் அனுசரணை நன்மதிப்பு தரும். தெய்வ தரிசனம் செய்தல் குருமார்களிடம் ஆசிபெறுதல் ஆகிய உயர்பலன் தரும். எல்லாக்காரியங்களும் வெற்றிகரமாக செயற்பட்டுக் கொண்டிருக்கும். தாரம் புத்திரர்களின் நலம் நன்றாக இருந்துவரும். ஜுலை 27, 28 தேதிகள் சந்திராஷ்டமம். திங்கள், செவ்வாய் சுபம்.

8. விருச்சிகம் :- விசாகம் ¼ - அனுஷம் - கேட்டை

விருச்சிக ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப அவசிய செலவினங்களும் ஏற்படுதல் ஆகும். ஜுலை 26 தேதியின் மேல் அரச கெடியில் எல்லாக்காரியங்களையும் செயற்படுத்தும். பொது நலன்கள் பல செய்யும். தாரம் புத்திரர்களுக்கு சௌக்கிய பலனை தரும். ஜுலை 29, 30, 31 தேதிகள் சந்திராஷ்டமம். புதன், வியாழன் சுபம்.

9. தனுசு :- மூலம் - பூராடம் - உத்திராடம் ¼

தனுர் ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். வித்துவத்துவம் கலைத்துறைகளில் அரச நன்மைகளைச் செய்விக்கும். எல்லாக்காரியங்களையும் ராஜகெடியில் செயல்படுத்துதல் ஆகும். புத்திரர்களின் கல்வி கலைகளில் முன்னேற்ற ஸ்திதியை ஏற்படுத்தும். தாம்பத்திய வாழ்க்கை தெய்வபக்தியில் தானதர்மத்துடன் நடக்கும். குலதெய்வ பூசை செய்தலால் நலன்கள் பல ஏற்படும். ஆகஸ்டு 1, 2 தேதிகள் சந்திராஷ்டமம். வெள்ளி, சனி சுபம்.

10. மகரம் :- உத்திராடம் ¾ - திருவோணம் - அவிட்டம் ½

மகர ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வரும். நெருக்கடி பிரச்சனைகள் வருவதும் அவசிய செலவினம் ஏற்படுதலும் ஆகும். வித்துவத்துவம் கலைத்துறையில் ஜூலை 29 தேதியின் மேல் விசேஷ பலனை உண்டு பண்ணும். கால் சுருக்குதல் எலும்பு முறிவு போன்ற விபத்து ஏற்பட்டுத் தப்பும்' குலதெய்வத்துக்குப் பூசை செய்வதால் எல்லாவற்றிலும் சுபிட்சம் ஏற்படும் ஆகஸ்டு 3, 4 தேதிகள் சந்திராஷ்டமம். ஞாயிறு, திங்கள் சுபம்.

11. கும்பம் :- அவிட்டம் ½ - சதயம் - பூரட்டாதி ¾

கும்ப ராசி 9 பாதங்களும் சுபபலனாக நடக்கும். பணவருமானம் பெருமதிப்பில் வந்துகொண்டிருக்கும். வித்துவத்துவம் கலைத் துறையில் அரசாங்கத்திலிருந்து நன்மைகள் ஏற்பட்டுவரும். பூமி இயந்திரங்களில் அபிவிருத்தி பலன் ஏற்படும். ஓர் நவீன பொருள் பிராப்தியையளிக்கும், எல்லாக்காரியங்களும் கெடியான தோரணைக்கு ஏற்ப வெற்றிகரமாகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். ஆகஸ்டு 5, 6, 7 தேதிகள் சந்திராஷ்டமம். செவ்வாய், புதன் சுபம்.

12. மீனம் :- பூரட்டாதி ¼ - உத்திரட்டாதி - ரேவதி.

கும்ப ராசி 9 பாதங்களும் மிச்சிர பலனாக நடக்கும். பண வருமானம் வந்துகொண்டிருக்கும். அதற்கேற்ப சாஸ்திரோக்த செலவினமும் ஏற்படும். ஜூலை 29 தேதியின் மேல் வித்தியா வியாபாராதிகளில் மேன்மை ஸ்திதி உருவாகுதலும் முயற்சித்த காரியங்களில் ஜெயபிராப்தியும் ஆகும். நவீன பொருள் அனுபோக பிராப்தியாகும். தாரம் புத்திரர்களின் சௌக்கியம் நன்றாக இருந்துவரும். மந்த ஸ்திதியாக இருந்தவை விரைவுபடுதல் பூர்த்தியாகுதல் ஆகும். ஆகஸ்டு 8, 9 தேதிகள் சந்திராஷ்டமம். வியாழன், வெள்ளி சுபம்.

ஸ்ரீலஸ்ரீசிவஞான தேசிகரின்
திருவருட்பாத் திரட்டுச் சிந்தனை :

பண்டார சாத்திரங்கள் :

காசிக் கதிர்காம வேலவர் திருவருட்பா, சிதம்பர நடேசர் திருவருட்பா

டாக்டர் திரு. சொ. சிங்காரவேலன், எம். ஏ., பிஎச். டி.,
மயிலாடுதுறை.

அநுபவம் - திருவருட்பா பெயர் வழக்கு :

கவிதை என்பது கனிந்த மனத்தின் எழுச்சி; கனிந்த மனம் தன் கனிவை வெளியிட முற்பட்டபோது அது அற்புதமான கவிதையாகின்றது. நம் அருளாளர்கள் தம் அநுபவத்தை இனிய கவிதைகளில் வெளிப்படுத்திய விழுமிய திறன் எண்ணுந்தோறும் உருகுதற்கு உரியது. அப்பாடல்கள், அவற்றைப் படிப்போர்க்கும் அவ்வநுபவம் பெறக் கருவியாகின்றன. இதனாலேயே "கவிதை என்பது ஒருவகையில் அநுபவத்தின் மொழிபெயர்ப்பே ஆகும்" ("Poetry is the translation of experience into language") என்ற திறனாய்வு மொழி, நம் அருளாளர்களின் திருப்பாடல்களை நோக்க நூற்றுக்கு நூறு அப்படியே பொருந்துகின்றது.* அநுபவம்-

---

* "Indian thought believes in the reality of spritual experience. Experience is the fruit of knowledge. Knowledge should lead to realization. We move to another intensity, a deeper communiion" - என்ற டாக்டர் எஸ். இராதாகிருஷ்ணன் மொழிகளை இங்குக் கருதுக. "Religion in a changing world", (1967) Newyork Humanities Press. 98

திருவருள் பெற்று அதில் தோய்ந்த கனிவு - உடைய பாக்களைத் "திருவருட்பா" என வழங்குவதில் யாதொரு தடையும் இருக்க இயலாது. இராமலிங்க அடிகளாரின் திருவருட்பாவிற்கு முன்பே, தருமை ஆதீனம் பத்தாவது குருமூர்த்திகளாக விளங்கிய ஸ்ரீலஸ்ரீ சிவஞான தேசிகர் வழியாக இனிய திருவருட்பாக்களைத் தெய்வத் தமிழ் உலகிற்கு வழங்கிய திறம் உன்னுதற்குரியது. ஆம்; 'திருவருட்பா என்ற பெயர் வழக்கிற்கு ஏது தடை? 'திருவருளால் உந்தப்பட்ட - திருவருளை வழங்குகின்ற - திருவருள் வெளிப்பாடு ஆகின்ற பாடல்' என்று பொருள் கூறல் பொருந்தும். பத்தாவது குருமூர்த்திகள் பாடியருளிய காசித்துண்டி விநாயகர் முதல் தட்சிணாமூர்த்தியிறுதியாகிய பதிகங்கள் திருவருட்பாக்கள் என்றே வழங்கப்பெற்று வருகின்றன. அவற்றுள் இரண்டு திருப்பதிகங்கள், இக்கட்டுரையின்கண் ஆய்வு செய்யப் பெறுகின்றன.

காசிக் கதிர்காமவேலவர் திருவருட்பா – பொருளமைப்பு :

முதற்கண் – காசிக் கதிர்காம வேலவர் திருவருட்பாவை எடுத்துக் கொள்ளலாம். காசியில் எழுந்தருளியுள்ள கதிர்காம வேலவர் திருமுன்பு கனிந்து பாடியருளப் பெற்ற பத்துப் பாடல்கள் இதன்கண் அடங்கும். இப்பாடல்களின் உள்ளடக்கம் பற்றி முதற்கண் சுருக்கமாகக் காண்போம். முதல் பாடல், கதிர்காமவேலவர் 'திருவுருவச்சிறப்பு' மொழிவது; இரண்டாவது, 'பலவாறு பாடிக் கவிமாரி பொழிய' அருள வேண்டுவது. மூன்றாவது, 'எல்லாம் வல்ல குருக்கள் ஆகிய திருமுருகனுக்கு அத்துவித முத்தி அருளுதல் அரிதன்று; எளியது' என்று அருள் திறம் காட்டுவது. நான்காவது 'பேராற்றல் படைத்த திருமுருகன் கைவேலாயுதத்தினுல் தம் கன்மமாகிய மலையைப் பொடிபடுத்த வேண்டும்' என்று விண்ணப்பிப்பது, ஐந்தாவது, 'முருகன் எழுந்தருள இடம் தந்த திறம் படைத்த திருமயில், தம் மாயை என்ற பாம்பை அழித்தல் வேண்டும்' என்று வேண்டிக்கொள்வது. ஆறுவது, 'திருமுருகன் கொடியில் அமர்ந்துள்ள சேவல், தம் ஆணவம் என்ற இருள் விலகி விடியுமாறு கூவியருள வேண்டும்' என்று வேண்டுவது. ஏழாவது, 'அடியேனுக்கு அருள்புரிந்ததாலேயே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் என்று பாருளோர் மெச்சுவது மெய்யாகும்' எனக் கூறிப் போற்றுவது எட்டாவது, 'திருமுருகன் அடியார்க்குக் குற்றேவல் செய்யும் பேற்றைத் தமக்கருளவேண்டும்' என்று பரவுவது. ஒன்பதாவது, 'திருமுருகனின் திருவடி' கலைஞானம், கரபலம், வீரம், ஞானம், அழகு, மெய்வாழ்வு, ஆனந்த சுகம் முதலிய அனைத்தையும் சிவபெருமான் முதலாக

அடியவர் ஈறாக அனைவரும் அறிய வல்லவர்' என்றுரைத்து, 'கல் போன்ற என் மனம் அறிந்து உருகிட வல்லதோ' என்று முடித்து நெஞ்சை உருக்குவது. பத்தாவது, 'இறக்க முத்தி தரும் தலம் காசி என்ற எந்தை மொழி நம்புவதனால், பத்தியில்லாத எளியேனுக்கும், அடிமையாகும் திறம் உண்டு' எனக் கூறி 'அடிமை கொள வேண்டும்' என்று முடிப்பது.

இவ்வாறு இத்திருப்பதிகத்தே அமைந்த பத்துப் பாடல்களும் சிறந்த பொருளமைப்புடன் பொலிகின்றன.

ஒரு கவிதை ஓவியம் :

'எல்லா உலகங்களுக்கும் ஒளி வழங்கும் ஒருகோடி சூரியர் என விளங்கும் திருமேனிப் பேரொளி; உமை முலைப்பால் ஒழுகும் கடைவாய்; இளஞ்சிரிப்பு; உச்சிக்கொண்டை; நெற்றித் திலகம்; சுட்டி என்ற அணி; விளங்குகின்ற முடிக் கொண்டை; திருநீறும் பேரழகும் விளங்கும் திருநுதல்; அருள் மழை பொழியும் கடைக் கண்கள்; கருணை பொழியும் திருமுகம்; அம்மைதரும் திருமுலைப் பால் கிண்ணம்; திருக்கை மலர்கள்; அஞ்சேல் என்று கூறும் ஒரு கை மலர்; இரு செவிகள்; இரண்டு குண்டலங்கள்; திருவடித் தாமரைகள் - இவ்வாறு குழந்தை வடிவாய்,

"கல கலெனவே சிலம்பு அடியனேன் காண நீ
காசிதனில் ஓடி வருவாய்"

என்ற திருப்பாட்டு ஒரு கவிதை ஓவியம்.

சொல் வழக்கு :

'குரு' என்ற சொல்லுடன் மரியாதை விகுதியாகக் 'கள்' என்பதனைச் சேர்த்துக் 'குருக்கள்' என்று முருகனைக் குறிக்கும் அழகும், அதனை ஆறு முறை அடுக்கிய அழகும் மூன்றும் பாடலில் காணத் தக்கவை.

சித்தாந்தப் பொருண்மை :

'குடிலை' என்றபிரணவத்தையும், (3) 'கன்மம்' 4 'மாயை' (5) 'ஆணவம்' (6) என்ற மும்மலங்களையும், 'அத்துவிதம்' (3) என்ற சைவசித்தாந்த முத்தி நிலையினையும், 'சிவமகா வாக்கியம்' (10) என்ற பெரும் பெயர்த் தொடரையும், இப்பதிகத்தில் குறித் துள்ளார். சைவசித்தாந்தப் பேருண்மைகளை இவை உணர்த்து

கின்றன. 'மும்மலங்களிலிருந்து விடுபட்டு அத்துவித முத்தி அடைய வேண்டும் என்ற சிவநெறிப் பெரும்பொருளை உணர்த்தும் திறம் ஓதி உணரத்தக்கது. மெய்ப்பொருளாகிய சிவபரம் பொருளைக் குருமூர்த்திகள்,

" தற்பரஞ் சோதியே! பூரணப் பிரமமே!
சதுர் முகப் பிரமாதியோர்
சதுர்மறையும் அடி முடிகள் காணமலே தேடு
சச்சிதானந்த சிவமே! " (2)

என்று உரைக்கும் பொருள் திறம் இனியது. 'அருள் அமுத தாரைகளைப் பொழியும்மேகம், 'என்னுயிர்க்குயிர்', 'கருணைப் பேறு', 'சிந்தாமணிக் குவியல்', 'தேன் சலதி' (கடல்), 'அடியார்கள் தேடவரும் அரு மருந்து' 'கற்பகச் சோலை' என்று பக்திச்சுவை ததும்பப் பாராட்டி மகிழும் தாயுள்ளம் குருமூர்த்திகள் உள்ளம். (2)

" ஆறெழுத்து மந்திரத்தை " ஐந்தாவது பாடலில்

" அரிமருக சரவணபவா எனும் அடியவர்
அச்சம் தவிர்த்தருள மயில் "

என்று அழகுற இழைத்து நெறிகாட்டியருள்கின்றார். கன்மத்தை 'மலை' என்றும், மாயையைப் 'பாம்பு' என்றும், ஆணவத்தை 'இருள்' (திமிரம்) என்றும் உருவகம் செய்தல் (6) சித்தாந்தச் செம்பொருள் உணர்ந்தோர்க்கு அரும்பொருள் நுட்பம் காட்டுவ தாகும்.

" சிவாநந்த நாதன் என்னும்
சிவமகா வாக்கியம் சென்னிமேல் சூட்டலால் " (10)

என்ற தொடர், கமலை ஞானப்பிரகாசர் அருளிய சிவாநந்த போதம் என்ற ஞானசாத்திரத்தை உணர்த்தி, அக்குருநாத னுடைய திருப்பெயரே 'மகாவாக்கியம்' என்று காட்டித் தாம் பெற்ற திட்சை அநுபவத்தையும் தெளிவுறுத்துகின்றது.

சிதம்பர நடேசர் திருவருட்பா - பொருளமைப்பு :

'சிதம்பர நடேசர் திருவருட்பா' அழகிய காப்புச் செய்யுள் ஒன்றுடன் திகழ்கின்றது. அந்தச் செய்யுள் பின்வருமாறு :

"சீர்மருவு தில்லைச் சிதம்பரநா தன்மீது
பேர்மருவு நற்பதிகம் பேசுதற்கு — ஏர் மருவு
கற்பகவேல் விட்ட மலர்க் கையன்முன்னோன் யானைமுகக்
கற்பக விநாயகன்றாள் காப்பு"

இதனால் விளங்கும் செய்திகள்: (1) இந்தப் பத்துப் பாடல்களையும் 'சிதம்பரநாதர் பதிகம்' என்ற தொடரால் ஆசிரியர் குறிக்க விழைந்திருக்கக் கூடும். (2) முருகன் கிரௌஞ்ச மலையாகிய (கல் + பக) மலை பிளந்திட வேலாயுதத்தைச் செலுத்திய மலர் போன்ற கரங்களை உடையவன். (3) தில்லை விநாயகர் திருப்பெயர் 'கற்பக விநாயகர்'.

நடராசப் பெருமான் திருக்கூத்து இயற்றும் திருக்கோலத்தை 'ஆட', 'ஆட' என்ற சொல்லை அடுக்கி உணர்த்துவர். முதற் பாடலில், சிவபரம்பொருளின் திருவடிகள், சமயாசாரியர் நால்வர் பாடிய தமிழ்மாலை அணிந்த மாண்பை உடையவை என்பது முதலாக முனிவர், தேவர் நாள்தோறும் அஞ்சலி செய்து பரவும் திறன் உடையவை என்று முடித்து 'அடியனேன் கண்டு தரிசிக்க எளிதன்று' என்றுகூறுவர். இரண்டாம்பாடலில் 'சிவபரம்பொருள் செங்கதிரவன் எனப் பேரொளி பரப்பும் ஒளிப்பொருள் எனக் காட்டி உன்னைத் தெரிந்து தெரிசிப்பது எந்நாள்' என்று உருகுவது, மூன்றாவது பாடல். 'இறைவனின் ஐந்தொழில் திருக்கூத்துப் (பஞ்ச கிருத்திய மகாதாண்டவம்) பற்றி மனமுருகப்பாடி,

"செம்பொன் அம்பலம் என்பது என்னுளமதாகவே
செய்து கொண்டே நடிப்பாய்"

என்று வேண்டுவது நான்காவது பாடல். தன் திருக்கூத்தால் எவ்வெவ் வகையில் ஐந்தொழில் புரிகின்றான் நடராசப்பெருமான் என்று விளக்கி

"திருநடன மகிமைதனை ஆர் உள்ளபடி கண்டு
தெரிசித்திருக்க வல்லார்?"

என்ற வினாவுடன் முடிப்பது ஐந்தாவது பாடல். 'இறை நிலைகளை நாதம், விந்து, சதாசிவன், மகேசுவரன், உருத்திரன் எனக் காட்டி விளக்கி உன் சிவந்த சரணகமலத் தேனை உண்டு உண்டு தேக்கிட்டிருப்பது எந்நாள்' என்று உருகுவது ஆறும் பாடல் ஆகும்.

சங்கார காரணனாக விளங்கும் சிவபிரானின் ஊழித் தாண்டவத்தை விளக்கி, 'ஆயிழையுடன் தனித்து ஆனந்த நிர்த்த மிடு தெய்வம் இங்கு என்னை ஆள்வாய்' என்று விண்ணப்பிப்பர் ஏழாம் பாடலில். இறைநிலையைச் சித்தாந்த நெறியில் விளக்கி, அக்குஞ்சித பதத்தை 'என் சிந்தை மறவாது கண்டாய்' என்று விளக்குவது எட்டாம் பாடல். உலகமெலாம் நடனமிடும் இறைவனின் விசுவரூபம் உள்ளத்துள்ளே சுருக்கிக் கொண்டு விளங்குவதை ஒன்பதாம் பாடலில் விளக்குவது காணலாம்.

"சித்தமாகிய சபையினுள்ளே அடங்கிடும்
தெய்வீகம் என்ன சொல்வேன்?"

என்று வியப்பதை இங்குக் காண்கின்றோம். அரி, பிரமர், இந்திரர் முதலிய அனைத்தும் பதவிகளே என்றும், அவற்றையெல்லாம் கடந்த சிவானந்தம் தோய்வதே இன்பம் தரும்பேறு என்றும் உணர்த்துவது பத்தாம் பாடலில். நடராசப் பெருமானைத் தரித்து இன்பம் பெற்றதுடன், வினைகள் எல்லாம் நீக்குக என்றும், எண்பத்து நான்கு நூறுயிரம் சென்மங்களினும், புண்ணிய மிகுந்த இச்சென்மம் அன்றோ சென்மம்! என்று மகிழ்ந்து நிறைவு செய்கின்றார் பதினோராம் பாடலில். (மற்ற திருவருட்பாக்களை 10 பாடல்களுடன் நிறைவு செய்த குருமூர்த்திகள், சிதம்பர நடேசர் பற்றிய இதனை 11 பாடல்களுடன் நிறைவுசெய்துள்ளமை கூர்ந்து நோக்கி உணர்தற்குரியது.)

சித்தாந்தப் பொருண்மை :

சைவசித்தாந்த ஞான சாத்திரங்களின் கருத்துக்களைப் பிழிந்து இப்பதிகத்தின் பாடல் ஒவ்வொன்றிலும் அமைத்துள்ளார் நம் அருளாசிரியர்.

'சிவபரம்பொருளாகிய பேரொளி கண்டு 'செங்கதிரவன்' என்று போற்றும்போது தனு கரண புவன போகம் அனைத்தும் கானல் நீராகவும், சார்வாகர் முதலான பரசமய வாதிகளாகிய குருடர்க்கு இருட்டாகவும், வளர் சைவ சம்பரதாயம் வந்த சித்தாந்திகள் என்னும் விழி படைத்தவர்களின் மலவிருள் ஓடி விடியவும் அவர்தம் இதயத் தாமரைகள் மலரவும், பரை முதலிய பஞ்ச சத்திகள் என்ற ஒளிக்கதிர்களைப் பரப்பி நடனம் இடும் செங்கதிரவன்' என்று பாடும் இடம், அனைத்துச் சமயங்களுக்கு இடையே சைவசித்தாந்தம் எவ்வாறு தலைமை சான்று விளங்கு கின்றது என உணர்த்துவது.

ஒரு கணக்கில்லாத ஆன்ம வர்க்கங்களுக்கு (4) என்பதனால் பசுக்கள் பல என்று உணர்த்துகின்றார்.

" அருளென்று தூக்கி ஆடிய பாதம்
மும்மலங்களையும் அற வேர்பிடுங்கி
அகண்ட பரிபூரண சிதானந்த வாரியை
அளிக்கும் உன்னருள் " (5)

என வருவது பதியின் சிறப்பையும், பசு வர்க்கங்களுக்கு (ஒரு மலம் உடையோர், இருமலம் உடையோர், மும்மலம் உடையோர்)ப் பதிப்பொருள் செய்யும் உபகாரத்தை விளக்குவது. இவ்வாறே பின்வரும் எட்டாம் பாடல் பதியினை காட்டும். அழகிய பாடல் ஆகும்.

" உருவல்ல அருவல்ல உருவருவுமல்ல இங்கு
ஒருவிதத்து அறிவதல்ல
ஒன்றல இரண்டுமல உள்ளல்ல வெளியல்ல
ஒன்றினுந் தோய்வதல்ல
இருளல்ல ஒளியல்ல இலதல்ல உளதல்ல
இன்பத் துன்பங்களல்ல
இலகுநற் சித்தல்ல விலகரும் அசித்தல்ல
ஈறுமுதலுடையதல்ல
மருளுடன் பகலின்றி இரவின்றி நின்றவர்கள்
மாசற்ற மன வெளியெனும்
மாகனக சபைநடுவிலே என்றும் ஒழியா
மனோலயானந்த மாய்த்
தெருளென்று நின்றருள் குஞ்சித பதத்தையென்
சிந்தை மறவாது கண்டாய்
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபா னந்தனே "

இருபதிகங்கள் - பொதுக்குறிப்பு :

இத் திருவருட்பாக்களும் மற்றைய திருவருட்பாக்களைப் போலவே, கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்ற யாப்பிலேயே அமைந்துள்ளன.

" கங்கையுமை பாலனே கதிர்காம வேலனே
கந்தசாமிக் கடவுளே "

" செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபா னந்தனே "

என்ற தொடர்கள் அழகிய மகுடங்களாக இருக்கின்றன. வட சொற்களைத் தனியாகவும் தொடராகவும் மிகுதியாகவே குருமூர்த்திகள் பயன்படுத்தியுள்ளார்கள். சந்தக்குறிப்பு விருத்தங்களின் உள்ளே ஊடுருவும் இசையிழையாக அமைந்துள்ளது. வாய்விட்டுப் பாடுவோர்க்கு உருக்கத்தையும் பக்தியையும் உண்டாக்கும் பாடல்களாக அனைத்துப் பாடல்களுமே அமைந்துள்ளன. இவற்றை ஆதி குருமூர்த்திகள் வழங்கும் அருள் அநுபவத்தை நாமும் பெற முயல்வோம்.

திருநடனம்

விரித்தசெஞ்சடை ஆட வதனசந்திரன் ஆட
விரிகமல நயனம் ஆட
வெண்முறுவல்நிலவு ஆட நண்ணிதமருகம்ஆட
வீசுப் ஒரு செங்கைஆடத்
தரித்தபுலி அதள்ஆட அபயகரம் ஆடஇரு
தங்குதோடு ஊசல் ஆடத்
தாங்குநூல் ஆட மேலோங்குநீர் ஆடஒளிர்
தண்பவள மேனி ஆட
உரித்தகரியுரி ஆட உரக கங்கணம் ஆட
உபயபரி புரமும் ஆட
ஒருபதம் எடுத்து ஆட ஒருபதம் மிதித்து ஆட
உள்ளே மகிழ்ந்து சற்றே
சிரித்துமலைமங்கை கொண்டாட நின்றுடும் உன்
திருநடனம் என்று காண்பேன்?
செகம்பணி திகம்பர சிதம்பர நடேசனே
சிற்சொரூபானந்தனே.

— ஸ்ரீ சிதம்பர நடேசர் திருவருட்பா.

ஆடி மாதச் சிறப்பு நாட்கள்

16—7—89 ஞாயிறு, தக்ஷிணாயன மாஸப்ரவேச புண்யகாலம், ஆடிப் பண்டிகை, கடகரவி 28-33. பிரதோஷம். சீகாழி ஸ்ரீ உமா மகேசுவரருக்கு உச்சிக் காலத்தில் புழுகாப்பு. திருக்கடவூர் ஸ்ரீ காலசம்ஹாரமூர்த்தி அபிஷேகம்.

21—7—89 வெள்ளி, சீகாழி, வைத்தீசுவரன்கோயில், திருக்கடவூர் முதலிய தலங்களில் ஸ்ரீ அம்பாளுக்குச் சந்தனக்காப்பு அலங்காரமும், நவசக்தி அர்ச்சனையும், இவ்விதம் ஆடி மாதம் ஒவ்வொரு வெள்ளியிலும் நடைபெறும், வேளூர் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் மாகேசுவரபூஜை, சங்கடஹர சதுர்த்தி.

26—7—89 புதன், வேளூர், சீகாழி, நாகை, திருவையாறு, மதுரை, திருக்கடவூர் முதலிய தலங்களில் ஆடிப்பூர மகோற்சவ ஆரம்பம்.

27—7—89 வியாழன், கிருத்திகைவிரதம், வேளூர் கிருத்திகை, தருமை ஸ்ரீ சண்முகர் அபிஷேகம். மூர்த்திநாயனூர், புகழ்ச்சோழ நாயனூர் குருபூஜைகள்.

30—7—89 ஞாயிறு, பிரதோஷம், மாத சிவராத்திரி, கூற்றுவநாயனூர் குருபூஜை.

1—8—89 செவ்வாய், சர்வ அமாவாசை. திருவையாற்றில் இரவு ஸ்ரீ அப்பர் சுவாமிக்குத் தென்கயிலாயதரிசனம். ஸ்ரீ பஞ்ச மூர்த்திகள் காட்சி கொடுத்தருளல். தருமை 25 ஆவது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ கயிலை சுப்பிரமணிய தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் கயிலை கண்ட திருநாள். ஆதீன மடாலயத்தில் திருக்கயிலாயமலைத் திருவுருவப் படம் திருவீதியுலா.

2—8—89 புதன், ஆடிபதினெட்டாம் பெருக்கு. வேளூர், திருவையாறு முதலிய தலங்களில் தீர்த்தம்.

3—8—89 வியாழன், ஆடிப்பூர மகோற்சவ திருத்தேர்.

4—8—89 வெள்ளி, திருவாடிப்பூரம், வேளூர், சீகாழி, திருக்கடவூர், திருவையாறு, நாகை, மதுரை முதலிய தலங்களில் ஆடிப் பூர மகோற்சவதீர்த்தம்.

7—8—89 திங்கள், பெருமிழலைக்குறும்பர் குருபூஜை.

9—8—89 புதன், ஆடிச் சுவாதி, ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள், கழறிற்றறிவார் குருபூஜைகள்.

11—8—89 வெள்ளி, வரலக்ஷ்மி விரதம்.

12—8—89 சனி, கலிய நாயனூர், கோட்புலி நாயனூர் குருபூஜைகள்.

13—8—89 ஞாயிறு, மயிலாடுதுறைஸ்ரீசியாமளதேவிக்குப்புஷ்பாஞ்சலி.

14—8—89 திங்கள், சோம பிரதோஷம்.

15—8—89 செவ்வாய், ஆடி கடைச்செவ்வாய், திருக்கடவூர் முனீசுவர பூஜை. சுதந்திரதினம். பட்டினத்தடிகள் குருபூஜை. வேளூர் பவித்ரோத்ஸவ பூர்த்தி. ஸ்ரீ துர்க்கா பரமேஸ்வரி அம்பாளுக்கு விசேஷ அபிஷேக ஆராதனை.

Regd. No. TN / M. M. 1
வெளிநாடு Regd. No. TN / M. M. 4

தருமை ஆதீனம்

அனைத்துலக சைவசித்தாந்த

ஆராய்ச்சி நிறுவன ஆங்கில வெளியீடுகள்

1. Journal Vol. 1. No. 1.
   Double Crown 1×8. Pages 91. Rs. 25-00
2. Journal Vol. 1. No. 2.
   Donble Crown 1×8. Peges 78. Rs. 25—00
3. Journal Vol. 2. No. 1.
   Double Crown 1×8. Pages 35. Rs. 25—00
4. Journal Vol. 2. No. 2.
   Double Crown 1×8. Pages 92. Rs. 25 - 00
5. Journal Vol. 3 No. 1.
   Double Crown 1×8. Pages 86. Rs. 10—00
6. A Critique of Saiva Siddhanta Epistemology With Special Referencc To Cit-Sakti (Pamphlet)
   Double Crown 1×16 Pages 16 Rs. 2—00
7. Five Naayanmaar
   Double Dimmy 1×8 Pages 60 Rs. 7—50
8. Mudralakshanam
   Double Dimmy 1×16 Pages 32 Rs. 15 - 00

கிடைக்குமிடம் :- இயக்குநர்.

அனைத்துலக சைவசித்தாந்த ஆராய்ச்சி நிறுவனம்,

தருமபுரம், மயிலாடுதுறை - 609 001.

தஞ்சை மாவட்டம்.

Printed & Published by V. Ramaiah Pillai Manager, Dharmapuram, at the Gnanasambandam Press, Dharmapuram, Mayiladuthurai 10-7-89